## அத்தியாயம் 3

# பொருளாதார சமூக உட்கட்டமைப்பு

### 3.1 பொதுவான நோக்கு

விரைவான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற உறுதியான பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பிற்கான அத்திவாரத்தின் அடிப்படைக் கூறுகளாக வினைத்திறன் மிக்க நிறுவனங்கள், காத்திரமான ஒழுங்கு விதிகள், சரியான விலையிடல், போதுமானளவு முதலீடுகள் மற்றும் துல்லியமான இலக்கிடல் என்பன விளங்குகின்றன. விரைவான வளர்ச்சிக்குத் தேவையான நிபந்தனையாக இவை விளங்குவதற்குப் புறம்பாக, நன்கு அபிவிருத்தியடைந்த உட்கட்டமைப்பு முறையானது தொடரான வர்த்தகப்படுத்தத்தக்க பணிகளை உருவாக்குவது மட்டுமன்றி, உள்ளீடுகள் மற்றும் சந்தைகளை அணுகக்கூடிய தன்மையினை அதிகரிப்பதன் மூலம் வறுமையினை ஒழிப்பதற்கும் உதவுகின்றது. ஆகவே உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக உதவத் தவறுமிடத்து அது வளர்ச்சியையும் வறுமை ஒழிப்பையும் தடைசெய்வது மட்டுமன்றி நலக் கவனிப்பு மற்றும் கல்வி போன்ற பணிகளுக்கான தேவையை உள்நாட்டிலே நுகரப்படுகின்ற பணிகளிலிருந்து வெளிநாட்டில் நுகரப்படக்கூடிய பணிகளுக்கு மாறுகின்ற விரும்பத்தகாத விளைவுகளையும் உருவாக்கும்.

குறைந்தது மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், பெரும்பாலான உட்கட்டமைப்பு வசதிகளை தனியார் துறை வினைத்திறன் மிக்க முறையில் வழங்கக்கூடியதாக இருந்தபோதும், உட்கட்டமைப்பு வசதிகளில் பெரும்பாலானவை அரசாங்கத் துறையினால் வழங்கப்பட்டு ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டு வந்தன. இவ்வசதிகள் பொருத்தமான முறையில் விலையிடப்பட்டோ அல்லது இலக்கிடப்பட்டோ இருக்காமையினால் அது அளவுக்கதிகமான பாவனை, அதிகரித்த இறைச்சுமை, பொருத்தமற்ற மூலவள ஒதுக்கீடு என்பனவற்றிற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் அரச முதலீடுகளின் தேவையான வீதத்தினை தொடர்ந்தும் அடைய முடியாமல் போனமைக்கும் வழிவகுத்தது.

1977 இல் இடம்பெற்ற பொருளாதார தாராள மயமாக்கலின் பின்னர், அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினைப் போதுமானளவிற்கு தொடர்வதில் அதிகரித்த இடர்ப்பாடுகளும் சிவில் பணிகளின் வினைத்திறனை முன்னேற்றுவதிலும், அரசியல் தலையீடுகளற்ற விதத்தில் பொருத்தமான விலையிடல் மற்றும் இலக்கிடல் பொறிமுறை மேற்கொள்வதிலும் இடர்ப்பாடுகள் உணரப்பட்டமையின் காரணமாக விரைவாக விரிவடைந்துவரும் கேள்வியை ஈடுசெய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள் படிப்படியாக சீரமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. சீர்திருத்த வழிமுறைகள் நுழைவிற்கான தடைகளை அகற்றுதல்/ தளர்த்தல், முகாமைப்படுத்தலினை வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுதல், அரச-தனியார் பங்குடமை, தனியார் மயமாக்கல், தெளிவான விலையிடல் உபாயங்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபைகளை நிறுவுதல், நலன்புரி இலக்கிடலை மேம்படுத்துதல், மற்றும் சிவில் பணிகளை சீரமைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க, 2004 இல் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளிலும் சீர்திருத்தங்களிலும் மேலும் முன்னேற்றங்கள் அடையப்பட்டன. உட்கட்டமைப்புக்களை வழங்குகின்ற அரச துறை நிறுவனங்களின் வசதிகள் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்குட்பட்டன, உட்கட்டமைப்பின் செயற்பரப்பு விரிவாக்கப்பட்டதுடன் கொள்கைகள் வலுவாக்கப்பட்டன.

பொருளாதாரப் பணிகளை வழங்குகின்ற பல்வேறு நிறுவனங்களினதும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, அவை 2004 இல் நிறுவப்பட்ட முக்கியத்துவம் மிக்க அரச தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டன. அவையாவன இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கைப் புகைவண்டி, வானூர்தி நிலைய வான் போக்குவரத்து அதிகாரசபை, கொத்தணி பேரூந்துக் கம்பனிகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பனவாகும். இலங்கை துறைமுக அதிகாரசபை தவிர்ந்த இவ்வனைத்து தொழில் முயற்சிகளினதும் நிதியியல் செயலாற்றம் கடந்த காலத்தில் மிக மோசமாகக் காணப்பட்டதுடன் சரியான சீர்திருத்த செயலாற்றம் இல்லாமையினால் இந்நிலைமை அப்படியே தொடர்ந்தும் இருந்து வருகிறது. அரசாங்கத்தின் வசமுள்ள மிகப் பாரிய இத்தகைய நிறுவனங்களில் பரந்தளவில் நீண்ட காலமாகக் காணப்படும் இந்நலிவுற்ற தன்மைகள், தேசிய பொருளாதாரத்தில் அவை உற்பத்தி செய்யும் பணிகளின் உபாய முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொள்கையில் நாட்டின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாகி விடக்கூடும்போல் தோன்றுகிறது.

1997 இல் நலத்துறை மீதான சனாதிபதி செயலணிக் குழுவினால் செய்யப்பட்ட முக்கியமான விதந்துரைப்புக்கள், நலத்துறை கவனிப்புக்களை பெற்றுக்கொள்ளும் தன்மை, பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல், நிறுவன ரீதியான அமைப்பினை சீர்திருத்துதல், மாற்று நிதியியல் பொறி முறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தனியார் அரச ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் என்பன மீதான கூடிய கவனத்துடன் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும் 2003 ஒத்தோபரில் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய முகவரின் ஒத்துழைப்புடன் வடிவமைக்கப்பட்ட தேசிய நல அபிவிருத்தி முதன்மைத் திட்டத்தின் கீழ் அநேக சீர்திருத்தங்களும் அபிவிருத்திகளும் கொண்டு வரப்பட்டன.

கல்வித் துறையில், 1998 இன் பின்னர் தொடங்கிய தொடரான பல அண்மைய, சீர்திருத்தங்கள் கல்வி உட்கட்டமைப்பின் மேம்பாடு, தரம், மற்றும் அனைத்து மட்டங்களிலுமான பணி வழங்கல் என்பனவற்றினை முக்கிய இலக்காகக் கொண்டிருந்தன. இம்முயற்சிகள், பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு பெருமளவு கல்வி வாய்ப்புக்களை வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட 'நவோதய பள்ளிக்கூட நிகழ்ச்சித் திட்டம்' 2004 இல் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

2004 இல் உட்கட்டமைப்புப் பணிகள் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டின. தொலைத் தொடர்பூட்டலும் துறைமுகப் பணிகளும் தொடர்ந்து விரிவடைந்த வேளையில் மின்வலுத்துறை புதிய முதலீடுகளின் பற்றாக்குறை, வரட்சி மற்றும் உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் என்பனவற்றினால் பாதிக்கப்பட்டது. அரசிற்குச் சொந்தமான பேரூந்துக் கம்பனிகள் மற்றும் இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து 2004 இல் மேலும் நலிவுற்றமையை எடுத்துக் காட்டியதெனினும், தனியார் துறையினால் முகாமைப்படுத்தப்படும் பயணிகள் போக்குவரத்து பணிகள் விரிவடைந்தன. அதிகரித்த சுற்றுலா, உலக வான் போக்குவரத்துக் கைத்தொழிலின் மீட்சி, புதிய நாடுகளுக்கு பணிகள் விரிவடைந்தமை, அதேபோன்று அண்மைய கடந்த காலத்தில் வான் போக்குவரத்து துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் என்பனவற்றின் காரணமாக வான் போக்குவரத்து புத்துயிர்ப்படைந்தது. அதிகரித்த உள்நாட்டு, பன்னாட்டு வர்த்தகம், மேம்பட்ட உற்பத்தியாக்கம் மற்றும் காத்திரமான சந்தைப்படுத்தல் என்பனவற்றின் அனுசரணையுடன் துறைமுகப் பணிகள் வலுவான வளர்ச்சியை எடுத்துக்காட்டின. மேம்பட்ட பேரண்டப் பொருளாதார செயலாற்றத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட தாழ்ந்த வட்டி வீத அமைப்பின் பயனாக வீடமைப்பு சந்தை மேலும் பெருமளவிற்கு விரிவடைந்தது. நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் இன்னமும் நடைமுறைப் படுத்தப் படாதபோதும், சிறந்த இலக்கிடல் மற்றும் பல்வேறுபட்ட வருமான அதிகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக சமுர்த்தி நன்மை பெறுவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.

அவசியமாகத் தேவைப்படும் உட்கட்டமைப்பு சீர்திருத்தங்கள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாத வேளையில், இத்துறையிலான அரசின் முதலீடுகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை. எனவே, உட்கட்டமைப்பு வசதிகள், உலகின் எஞ்சிய பகுதியுடனும் விரைவான வளர்ச்சியினைக் கொண்ட ஆசிய பொருளாதாரங்கள் சிலவற்றினதும் அபிவிருத்திகளின் வேகத்திற்கு ஈடிணையாக அமையவில்லை. இது வீதிகள், மின்வலு, தொலைத் தொடர்பூட்டல்கள், போக்குவரத்து, நீர் வழங்கல் துறைகளிலும் அதே போன்று நலம் மற்றும் கல்வி வசதிகளிலும் கடுமையான வழங்கல் பற்றாக்குறைகளுக்கும், பிரதேச வேறுபாடுகளுக்கும் வழிவகுத்தது. பணிகளுக்கான விலையிடல் உற்பத்திச் செலவினை ஈடுசெய்யத்தக்கதாக இருக்காமையினால் முக்கியமான உட்கட்டமைப்பு நிறுவனங்கள் அரசாங்கத் திடமிருந்தான வரவு செலவுத் திட்ட ஆதரவிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டியிருந்தன. சுதந்திரமான ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறை பல துறைகளில் மிகக் குறைவானதாக இருந்ததுடன் கிடைக்கத்தக்கதாக இருந்த பொறிமுறைகளும் நலிவுற்றனவாக அல்லது வினைத் திறனற்றனவாகக் காணப்பட்டன. அரச நலக் கவனிப்பு தொழில் தகராறுகள், முதலீடுகள் போதுமானளவில் இல்லாமை, பிழையான இலக்கிடல் என்பனவற்றின் காரணமாக பாதிப்புக்குள்ளானது. இதன் விளைவாக,

அட்டவணை 3.1
**உட்கட்டமைப்பில் அரச முதலீடு**

| ஆண்டு | பொருளாதாரப் பணிகள் | | சமூகப் பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. பில் | மொ.உ.உ. இன் % | ரூ. பில் | மொ.உ.உ. இன் % | ரூ. பில் | மொ.உ.உ. இன் % |
| 1995 | 36.1 | 5.4 | 9.9 | 1.5 | 46.0 | 6.9 |
| 1996 | 31.4 | 4.1 | 10.3 | 1.3 | 41.7 | 5.4 |
| 1997 | 32.5 | 3.6 | 11.6 | 1.3 | 44.0 | 4.9 |
| 1998 | 44.7 | 4.4 | 15.5 | 1.5 | 60.2 | 5.9 |
| 1999 | 44.9 | 4.1 | 17.5 | 1.6 | 62.4 | 5.6 |
| 2000 | 54.7 | 4.4 | 16.5 | 1.3 | 71.1 | 5.7 |
| 2001 | 54.9 | 3.9 | 14.6 | 1.0 | 69.5 | 4.9 |
| 2002 | 51.7 | 3.4 | 15.7 | 1.0 | 67.4 | 4.3 |
| 2003 | 58.7 | 3.3 | 19.2 | 1.1 | 77.9 | 4.4 |
| 2004(அ) | 63.6 | 3.0 | 29.0 | 1.4 | 90.3 | 4.4 |


(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குடித்தொகையில் பெரும்பகுதியினர் இறப்பினை விளைவிக்கக்கூடிய தொற்றுநோயின் காரணமாக தமது பெறுமதிமிக்க மனித உயிர்களை இழக்கின்ற நிலைக்கு ஆளாகியுள்ளதுடன் பொருளாதார சூழலும் மோசமடைகிறது. கல்விப் பணிகளும் கல்வியை முடித்து வெளியேறுவோருக்கும் சந்தைத் தேவைகளுக்குமிடையில் கடுமையான பொருத்த மின்மையை உருவாக்கி வருவதுடன் விரைந்த பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக தேவைப்படும் மனித மூலதனத்தை உருவாக்கவும் அதனைத் தக்கவைத்துக் கொள்ளவும் முடியாதவையாக இருந்தன.

பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பில் பொதுவாகக் காணப்படும் மோசமான தரம் பல்வேறு நலிவுகளை எடுத்துக்காட்டியது. பன்னாட்டுப் போட்டித் தன்மையில் இலங்கையின் தரம் மிகக் குறைவாக இருப்பதானது, பிரதான கடற்பாதைகளுக்கு அணித்தாக இருக்கும் அதன் உபாய அனுகூலங்கள், உயர்ந்த கல்வியறிவு வீதம், தீவின் இயற்கை வனப்பு மற்றும் தாராளமயமான பொருளாதாரக் கொள்கைகள் எல்லாவற்றினையும் சிதைத்து விடுதாகவுள்ளது. நலக் கவனிப்பு மற்றும் கல்வி போன்ற பல இன்றியமையாத பணிகள் இலங்கையர்களால் வெளிநாடுகளில் பெற்றுக் கொள்ளப்படுகின்றபோதும் அவற்றினை வழங்கக்கூடிய உள்ளார்ந்த வளத்தினையும் அதன் மூலம் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணியினை உழைக்கக் கூடிய தன்மையினையும் நாடு கொண்டிருக்கிறது. சமூக உட்கட்டமைப்புப் பணிகளில் நாடு பன்னாட்டு ரீதியாக போட்டித் தன்மையுடன் விளங்குவதற்கு அடிப்படை சமூக உட்கட்டமைப்பிற்கு அப்பால் நாடு செல்லவேண்டிய தேவை காணப்படுகிறது. சரியான விலையிடல்கள் இல்லாமையானது தண்ணீர் போன்ற இயற்கை மூலவளங்களை அழிந்துவிடத்தக்க விதத்தில் அதிகளவில் பயன்படுத்துவதற்கு வழிவகுத்து "பொதுமக்களின் அவலம்" [1] என அறியப்படும் மோசமான நிலையொன்றிற்கு இட்டுச்செல்கிறது. ஆகவே உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு புதிய முயறசிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்வது வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்ற அதேவேளையில் போட்டித் தன்மைமிக்க வர்த்தகப் படுத்தத்தக்க பல பணிகளையும் உருவாக்குகிறது.

வரைபடம் 3.1
**நலத்துறை, கல்வி மீதான அரசின் செலவு**




## 3.2 பொருளாதார உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவன ரீதியான அமைப்பு மற்றும் செயலாற்றம்

### தொடர்பூட்டல் பணிகள்

இருமுக்கிய தொடர்பூட்டல் பணிகளாக தொலைத்தொடர்பூட்டல் மற்றும் அஞ்சல் பணிகள் விளங்குகின்றன. 1980களின் பின்னர் அறிமுகப் படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் இலங்கையின் தொடர்பூட்டல் துறையினை நாட்டின் மிகவும் தாராளமயமாக்கப்பட்டதும் விரைந்த வளர்ச்சியைக் கொண்டதுமான துறையாக மாற்றியிருக்கின்றன. இதற்கு மாறாக, அத்தகைய சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டமொன்று இல்லாதிருப்பதினால் அஞ்சல் பணிகள் மேலும் மோசமடைந்து, இறைச்சுமையினை அதிகரித்து அதன் நீண்ட கால உறுதிப்பாட்டுத் தன்மைக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. அஞ்சல் துறையின் சீர்திருத்தங்களை மேலும் தாமதப்படுத்தக் கூடாது என்பது பற்றிய உடனடிக் கவனத்தினை இது ஈர்ப்பதுடன், அவ்வாறில்லாவிடின் இது தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்களிலிருந்தான நன்மைபெறும் சந்தர்ப்பத்தினை இழக்கச் செய்துவிடும்.

தொலைத் தொடர்பூட்டல் பணிகளைப் பொறுத்தவரையில், உரிமம் பெற்ற 77

1. நாட்டின் பிரசைகள் தனிப்பட்ட ஊக்குவிப்புக்களில் மட்டுமே ஆர்வம் கொள்வார்களாயின் பொதுப்பொருட்கள் குறைவாக வழங்கப்பட்டு பொது மூலவளங்கள் மிகையாகப் பயன்படுத்தப்படும் என்பதனை அரசியல் தத்துவாசிரியர்களும், பொருளியலாளர்களும் விளங்கிக் கொண்டுள்ளனர். பண்ணையாளர்களுக்கு பொதுவான மேய்ச்சல் நிலங்கள் திறக்கப்பட்டு ஒருசில பசுக்கள் மட்டுமே மேய்ச்சலுக்காக அனுப்பப்படுமாயின் மேய்ச்சல் நிலங்களுக்கு பாதிப்பின்றி பசுக்கள் ஆரோக்கியமான வளர்ச்சியை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் பொதுவான மேய்ச்சல் நிலத்திற்கு கட்டுப்பாடற்ற அனுமதி வழங்கப்படுமாயின் அது நிலத்தின் மிதமிஞ்சிய பாவனைக்கும், பசுக்களின் குறைந்த உணவூட்டலுக்கும் வழிவகுத்துவிடும். இதனால் நன்கு வடிவமைக்கப்பட்ட போதியளவிலான ஒழுங்கு விதிமுறையானது சமுதாயத்திலுள்ள பல்வேறு குழுக்களினது ஒன்றுக்கொன்று முரண்பாடான தேவைகளை தீர்த்துவைத்து அவற்றிலிருந்து உரிமைகளை பாதுகாத்து பொருளாதார வளர்ச்சியை. விரைவுபடுத்தி சமூக நலன்களை அதிகரித்து, சமமான வருமான பங்கீட்டை உறுதிப்படுத்துவதுடன் இயற்கை மூலவளங்களையும் சூழலையும் பாதுகாக்கும். எனினும் காலத்திற்குக்காலம் குறிப்பாக வளர்ச்சியையும் அபிவிருத்தியடையும் மட்டுப்படுத்துகின்ற விதத்தில் சந்தைப் பங்கேற்பாளர்கள் தடுக்கப்படுகின்றார்கள் அல்லது விலக்கி வைக்கப்படுகின்றார்கள் என உணரப்படுகின்றபோது ஒழுங்குவிதி முறை காலத்திற்குக்காலம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். (இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2001 சிறப்புக்குறிப்பு 4)

தொலைத்தொடர்பு தொழிற்பாட்டாளர்களிடையே[2] குறிப்பிடத்தக்க போட்டி காணப்படுகிறது. எனினும், இவற்றின் பணிகளுக்காக அடக்கி வைக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கேள்வி காணப்படுகிறது. 2004 இல், வாடிக்கையாளர் வலையமைப்பு நியதிகளில் தொலைத்தொடர்பூட்டல் துறை, 36 சதவீதத்தினால் விரிவடைந்தது. செல்லிடத் தொலைபேசித் தொழிற்பாட்டாளர் 67 சதவீதப் பங்குகளுடன் சந்தையில் ஆதிக்கம் செலுத்தினர். செல்லிடத் தொலைபேசிகளின் பயன்பாடு முன்னைய ஆண்டினை விட 2004 இல் 59 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

இலங்கை ரெலிகொம்மின் தனியுரிமையாக இருந்த வெளிச்செல்லும் நுழைவுவழித் தொழிற்பாடுகள் 2003 இல் போட்டித்தன்மைக்கு திறக்கப்பட்டதுடன் 2004 இன் இறுதியில் 32 உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக, பன்னாட்டு நேரடி தொலைபேசி அழைப்புக்களுக்கான கட்டணங்கள் குறிப்பிடத்தக்கள விற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து அளவுகள் அதிகரித்துள்ளன. பிராந்திய மற்றும் பன்னாட்டு தரங்களுக்கு இணங்கும் விதத்தில் தொலைத் தொடர்பூட்டல் பணிகளுக்கான அதிகரித்து வருகின்ற கேள்வியை ஈடுசெய்வதற்காக 2003 இல் அறிமுகப் படுத்தப்பட்ட பத்து இலக்கத்தைக் கொண்ட இலக்கமிடல் முறை 2004 இன் தொடக்கத்தில் நிறைவுபெற்றது. 2004 மார்ச்சிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கிருந்த அழைப்பினை எடுக்கும் தரப்பினர் செலுத்தும் முறையானது அம்முறையுடன் தொடர்பான கட்டணங்கள் மீதான பிரச்சனைகள் தீர்க்கப்படாததன் காரணமாக பிற்போடப்பட்டன. அழைப்பினைப் எடுக்கும் தரப்பினர் முறை இந்தியாவிலும், பாகித்தானிலும் காணப்படுவது போன்று தொலைத்தொடர்பூட்டல் துறையின் வளர்ச்சியை மேலும் தூண்டக் கூடியதாயிருப்பதுடன் கிராமியப் பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் பணிகளை மேம்படுத்தக் கூடியதாயிருக்கும். 2002 நவெம்பரில் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற புதிய தேசிய தொலைத் தொடர்பூட்டல் கொள்கையில் குறிப் பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை வலுப்படுத்துவதன் மீதும் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதன் மீதும் முக்கிய கவனத்தினைச் செலுத்தும் அடுத்த கட்ட தாராளமயமாக்கல் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படாமலிருக்கிறது.

நகரங்களிலும், கிராமியத் துறைகளிலும் உள்ள தொடர்பூட்டல் வசதிகளிடையே பரந்தளவு ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றபோதும் இவ்விரு துறைகளிலும் காணப்படும் பொருளாதார நடவடிக்கைகளின் அளவிற்கேற்ற விகிதசமத்திற்கு ஏற்பவே இவையுள்ளன. 2004 இறுதியில் நிலையாகப் பொருத்தப்பட்ட மொத்த தொலைபேசிகளில் (கம்பி இணைப்பு), 44 சதவீதம் கொழும்பு மெற்றோபொலிட்டன் பிரதேசத்தில் காணப்படுகிறது. கிராமியப் பிரதேசங்களில் தொலைத்தொடர்பூட்டல் வசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, கிராமியப் புறங்களில் பொதுக் கட்டணத் தொலைபேசிகளை நிறுவுவதனை ஊக்குவிப்பதற்காக உதவுதொகைத் திட்டமொன்றினை தொழிற்படுத்தி வருகின்றது. இதன்படி, 2004 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் 260 பொதுக்கட்டணத் தொலைபேசிகள் நிறுவப்பட்டன. மேலும், இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு கிராமியப் புறங்களிலுள்ள 590 துணை அஞ்சல் அலுவலகங்களுக்கு தொலைத்தொடர்பூட்டல் வசதிகளை வழங்குவதற்கான செயற்றிட்டமொன்றினையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. 41 துணை அஞ்சல் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதிகளை வழங்கியதன் மூலம் மொனராகலை மாவட்டத்தில் முன்னோடி நிகழ்ச்சித் திட்டமொன்று முற்றுப்பெற்றது.

நாட்டின் தொலைத்தொடர்பூட்டல் வசதிகளை மேம்படுத்துவதற்காக 2004 இல் பல்வேறு தொலைத்தொடர்பூட்டல் செயற்றிட்டங்கள் செயற் படுத்தப்பட்டன. உள்நாட்டுப் பங்காளராக இலங்கை ரெலிகொம்மினையும் 15 பன்னாட்டுப் பங்காளர்களையும் கொண்ட தென்கிழக்காசிய-மத்திய கிழக்கு-மேற்கு ஐரோப்பா-IV என்ற கடலுக்கடியிலான கம்பிச் செயற்றிட்டம் 2005 இன் முடிவினுள் தொழில்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது இலங்கை தொலைத்தொடர்பூட்டல் முறையின் தரத்தினையும் அலைவரிசைகளின் அளவினையும் உயர்த்தும். வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் அதன் இயலளவை விரிவாக்குவதற்குமாக 2004 இல் இலங்கை ரெலிகொம் பல்வேறு செயற்றிட்டங்களிலும் ரூ.6.5 பில்லியனை முதலீடு செய்தது.

இலங்கையின் உயர்ந்த மட்ட கல்வி அறிவினைக் கவனத்திற் கொள்கையில், போட்டி விலைகளில் போதுமானளவிற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருப்பின், தொலைபேசியூடான சந்தைப்படுத்தல், அழைப்பு

2. இது நிலையாக பொருத்தப்பட்ட மூன்று தொலைபேசி தொழிற்பாட்டாளர்களையும், நான்கு செல்லிடத் செல்லிடத் தொலைபேசி தொழிற்பாட்டாளர்களையும், 32 வெளிச்செல் வழித் தொழிற்பாட்டாளர்களையும், 29 தரவுத் தொடர்பூட்டல் மற்றும் இணையத்தள பணிகளை வழங்குவோரையும், நான்கு பேஜிப் தொழிற்பாட்டாளர்களையும், இரு கட்டண தொலைபேசி தொழிற்பாட்டாளர்களையும், இரு தொலைபேசி ஊடிணைப்பு வானொலி தொழிற்பாட்டாளர்கள் மற்றும் குத்தகைக்கு விடப்பட்ட சுற்றோட்ட பணித் தொழிற்பாட்டாளர் ஒருவர் ஆகியோரை உள்ளடக்குகிறது.

அட்டவணை 3.2

**அஞ்சல் தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் வளர்ச்சி**

| விடயம் | 2003 | 2004(அ) | சதவீத மாற்றம் 2003 | சதவீத மாற்றம் 2004(அ) |
|---|---|---|---|---|
| 1. தொலைத் தொடர்பூட்டல் பணிகள் | | | | |
| 1.1 நிலையான இணைப்புக்கள் | | | | |
| வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் | | | | |
| தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) ('000) | 818 | 860 | 6.4 | 5.1 |
| வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) ('000) | 63 | 54 | -9.0 | -14.3 |
| இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் (எண்ணிக்கை)('000) | 378 | 334 | 23.4 | -11.6 |
| கம்பி இல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள் ('000) | 116 | 131 | 1.3 | 12.9 |
| தொலைபேசிக்கான பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) | 4.9 | 5.1 | 6.5 | 4.1 |
| 1.2 ஏனைய பணிகள் | | | | |
| செலுலர் தொலைபேசிகள்('000) | 1,393 | 2,211 | 49.6 | 58.7 |
| பொதுப் பே போன் தொலைபேசிகள் | 6,440 | 5,938 | -3.6 | -7.8 |
| வானொலி பேஜிங் பணிகள் | 2,851 | 828 | -48.3 | -71.0 |
| இணையமும் மின்னஞ்சலும் | 85,500 | 93,444 | 22.0 | 9.3 |
| 2. அஞ்சல் பணிகள் | | | | |
| அஞ்சல் வழங்கும் பரப்புக்கள் (எண்ணிக்கை) | 6,729 | 6,729 | 0.0 | 0.0 |
| அஞ்சல் நிலையங்கள் (எண்ணிக்கை) | 4,630 | 4,702 | 0.3 | 1.6 |
| அரசு | 4,050 | 4,040 | 0.1 | -0.2 |
| தனியார் | 580 | 662 | 1.8 | 14.1 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட பரப்பு (சதுர கி.மீற்றர்) | 14.1 | 13.9 | -0.7 | -1.4 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | 4,084 | 4,100 | -0.4 | 0.4 |
| குடியிருப்பாளர் ஒருவருக்குக் கிடைக்கும் கடிதங்கள் | 24 | 24 | -4.0 | 0.0 |

(அ) தற்காலிகமானவை


மூலங்கள்: வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம்
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
அஞ்சல் திணைக்களம்

நிலையங்கள், தரவு செய்முறைப்படுத்தல், இணையத் தளத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் போன்ற தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான பெருமளவு உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.

தகவல், தொலைத்தொடர்பூட்டல் தொழில் நுட்பத்தில் காணப்படும் விரைந்த அபிவிருத்திகளினால் அஞ்சல் பணிகள் எதிர்நோக்கும் சவால்கள் அதிகரித்து வருகின்ற அதேவேளையில், இதற்கு புதிய வாய்ப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டின் அஞ்சல் உட்கட்டமைப்பு, இலங்கையில் பணிகளை வழங்குகின்ற முறைகளின் பாரிய வலையமைப் பொன்றினை பிரதிநிதித்துவப்படுத்து வதுடன் நிதியியல், காப்புறுதி, தரவு மாற்றல்கள் போன்ற பல்வேறுபட்ட முகவராண்மைத் தொழிற் பாடுகளில் சிறந்த பணியினை வழங்கத்தக்க விதத்தில் நவீன முறைகளை அபிவிருத்தி செய்யத்தக்க உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருக்கின்றது. அத்தகைய மாற்றங்களுக்கு உத்தேச அஞ்சல் சீர்திருத்த மசோதாவிலுள்ள ஏற்பாடுகள் வசதியளிக்கும். சீர்திருத்தங்களில் காணப்படக்கூடிய தாமதங்கள் பணிகளின் தரத்தினை மேலும் நலிவுறச் செய்யும், மற்றைய போட்டிப் பணிகளிடம் சந்தைப் பங்குகளை இழக்கச் செய்யும், அத்துடன் தொடர்ச்சியான தொழிற்பாட்டு இழப்புக்கள் ஏற்கனவே விரிவடைந்துள்ள இறைச்சுமையை மேலும் பெரிதாக்கும். எனினும், மின் அஞ்சல் மற்றும் இணையத்தள பணிகள் பன்னாட்டு விளைவு அஞ்சல் பணி, உள்ளூர் விரைவு அஞ்சல் பணி தொலைபேசிக் கடைகள், தொலைநகல் காசுக்கட்டளைப் பணிகள் போன்ற புதிய பணிகளை அறிமுகப்படுத்துவதற்காக, அஞ்சல் திணைக்களம் தற்போதுள்ள கட்டமைப்பிற்குள் பல்வேறுசெயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. எனினும், அஞ்சல் திணைக்களத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவு ரூ.3,356 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்து அதன் வருமானத்தை விஞ்சிக் காணப்பட்டது. இதன் விளைவாக, 2004 இல் இதன் தொழிற்பாட்டு இழப்பு ரூ.971 மில்லியன்களாக விளங்கி

வரைபடம் 3.2

**தொலைபேசி அடர்த்தி**



ரூ.297 மில்லியன் கொண்ட வரவு செலவுத் திட்ட இலக்கினை விஞ்சிக் காணப்பட்டது.

அஞ்சல் பணியில் காணப்படும் அடிப்படைப் பண்பாக இத்துறையின் எந்த ஒரு வகை சீர்திருத்தங்களுக்கும் எதிரான தொழிலாளர் அமைப்புக்களினால் காட்டப்படும் உறுதியான எதிர்ப்புக்கள் காணப்படுகின்றன. வேலையை இழக்கக்கூடுமென்ற பயத்தின் காரணமாக இவ்வாறு எதிர்ப்பு காட்டப்படுகிறது. இத்துறையானது, விரைவாக மாற்றமடைந்துவரும் சந்தை மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகளுக்கு இணையாக தன்னை மாற்றிக்கொள்ள விரைவான முயற்சிகளை மேற் கொண்டாலொழிய இப்பயம் விரைவில் உண்மையாகி விடும். பொருளாதார வரலாறானது அத்தகைய வேதனையளிக்கத்தக்க உதாரணக் கதைகளினால் நிரம்பியிருக்கிறது. அச்சுறுத் தலுக்குள்ளாகியுள்ள துறை அதுவாகவே நவீன மயப்படுத்தப்பட்டாலொழிய எந்த ஒரு நவீன மயப் படுத்தல் செய்முறையிலும் இத்தகைய நிலைமையினைத் தவிர்க்க முடியாது. தொழிலாளர் அமைப்புகள் இந்த உண்மையை நன்குணர்ந்து அதற்கு சாதகமாக பதிலிறுக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

## வலு

இலங்கையில் வலுவின் முக்கிய மூலமாக உயிரின வாயு (48 சதவீதம்) காணப்படுவதுடன் இது பெருமள விற்கு வீட்டுத் துறையினராலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடலுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும், பெருமளவிற்கு வர்த்தக ரீதியான செறிவினைக் கொண்ட வலு மூலங்களாக மின்வலுவும், பெற்றோலியமும் காணப்படுகின்றன. இவ்விரண்டு துறைகளும் இலங்கையின் பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்கள விற்கு பாதிக்கப்படக் கூடிய தன்மைக்கு இட்டுச் செல்லக்கூடிய வெளிநாட்டு அதிர்வுகளின் ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டுக் காணப்பட்டதுடன் இதன் காரணமாக தேவையான அளவு தாக்குப்பிடிக்கும் திற னைப் பெற்றுக் கொள்வதற்கான கடுமையான சீர்திருத்தங்களை தேவைப்படுகின்றன.

**மின்வலு:** 2004 இல் மின்வலுத்துறை வரட்சி மற்றும் உயர்ந்த பெற்றோலிய விலை ஆகிய இரு அதிர்வுகளினால் பாதிக்கப்பட்டு உற்பத்திச் செலவினை அதிகரித்தது. எனினும் அத்தகைய சூழ்நிலையில் மாற்றமுறாத விலைகள் இலங்கை மின்சபையின் நிதியியல் நிலைமைகள் மோசமடைய வழிவகுத்ததுடன் பெருமளவு வரவு செலவுத் திட்ட உதவிகளையும் தேவைப்படுத்தியது. இதற்குச் சமாந்தரமான பாதகமான நிகழ்வுகளான, புதிய பொறிகளை நடைமுறைப் படுத்துதல், உத்தேச சீர்திருத்தங்கள் மற்றும் முறை மைகளில் காணப்படும் உயர்ந்த இழப்புக்களைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றிலான தாமதங்கள் அமைந்த அதன் பிரச்சனைகளை அதிகரிக்கச் செய்து, இதன் நீண்டகால உறுதிப் பாட்டினை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியது.

போதுமானதற்ற உருவாக்க இயலளவிலிருந்து தோன்றுகின்ற மின்வலுத் துறையின் பிரச்சனைகள் வரட்சியின் காரணமாக மேலும் மோசமடைந்தன. இவ்வரட்சியானது பின்னரைப் பகுதியில் மிதமாக மேம்படுவதற்கு முன்னர் முதலரைப் பகுதியில் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தினை 15 சதவீதத்திற்கு குறைவடையச் செய்தது. நடுத்தரக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் 6 சதவீதத்திற்கும் கூடுதலான பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு ஏற்ற

அட்டவணை 3.3

**வலுத்துறையின் செயலாற்றம்**

| விடயம் | 2003 | 2004(அ) | சதவீத மாற்றம் 2003 | சதவீத மாற்றம் 2004(அ) |
|---|---|---|---|---|
| கிடைக்கத்தக்க இயலளவு (மெ.வா.) | 2,243 | 2,378 | 1 | 6 |
| நிறுவப்பட்ட இயலளவு | 2,223 | 2,358 | 15 | 6 |
| நீர் மின் | 1,247 | 1,282 | 6 | 3 |
| வெப்ப மின் | 973 | 1,073 | 29 | 10 |
| காற்றாலை மின் | 3 | 3 | 0 | 0 |
| அவசரகாலவலு | 20 | 20(ஆ) | -93 | 0 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (கி.வா.ம.) | 7,612 | 8,158 | 12 | 7 |
| நீர் மின் | 3,310 | 2,960 | 23 | -11 |
| வெப்ப மின் | 3,904 | 4,571 | 22 | 17 |
| காற்றாலை மின் | 3 | 3 | -15 | -11 |
| அவசரகால வலு | 394 | 509 | -57 | 29 |
| சுய உற்பத்தி | - | 115 | - | - |
| மின்சபையின் மொத்த விற்பனைகள் (கி.வா.ம.) | 6,208 | 6,666 | 13 | 7 |
| வீடு, வணக்கத்தலம் | 2,030 | 2,204 | 11 | 9 |
| கைத்தொழில் | 2,159 | 2,266 | 16 | 5 |
| பொதுநோக்கம் | 1,042 | 1,132 | 13 | 9 |
| லங்கா எலக்ரிகல் கம்பனி மொத்தக் கொள்வனவு | 894 | 981 | 10 | 10 |
| தெரு விளக்குகள் | 83 | 83 | 0 | 0 |
| லங்கா எலக்ரிகல் கம்பனியின் விற்பனை உள்ளமைப்பு(கி.வா.ம.) | 847 | 913 | 11 | 8 |
| வீடு, வணக்கத்தலம் | 403 | 435 | 9 | 8 |
| கைத்தொழில் | 215 | 226 | 11 | 5 |
| பொது நோக்கம் | 170 | 191 | 14 | 12 |
| தெரு விளக்குகள் | 22 | 23 | 10 | 5 |
| ஏனையவை | 37 | 38 | 23 | 3 |
| திரண்ட முறையிலான இழப்பு (%) | 18.4 | 17.1 | -8 | -7 |
| பாவனையாளர்களின் எண்ணிக்கை (இ) ('000) | 3,379 | 3,597 | 6 | 6 |
| வீடு, வணக்கத்தலம் | 2,992 | 3,182 | 6 | 6 |
| கைத்தொழில் | 35 | 37 | 4 | 5 |
| வர்த்தகம் | 352 | 378 | 6 | 7 |

மூலங்கள்: இலங்கை மின் சபை
வரையறுக்கப்பட்ட லங்கா எலக்ரிகல் கம்பனி

(அ) தற்காலிகமானவை

(ஆ) சுன்னாகம் வலுப்பொறி (20மெ.வா) தவிர்ந்த அவசரகால வலுப் பொறிகள் 2004 ஒத்தோபர் இறுதியில் நிறுத்தப்பட்டன


(இ) லங்கா எலக்ரிகல் கம்பனியின் நுகர்வோர் உட்பட

விதத்தில் மின்வலுவிற்கான வளர்ந்துவரும் கேள்வியை ஈடுசெய்ய மின்வலுவின் உருவாக்க இயலளவினை ஆண்டுதோறும் 10 சதவீதத்திற்கு மேலாக அதிகரிக்க வேண்டிய தேவை இலங்கைக்கு காணப்படுகின்றது. எனினும், 2004 இல் புதிய பொறியினை தொழிற்படுத்தத் தொடங்கியதையடுத்து ஆரம்பிக்கப்பட்டதுடன் (கெலடாநவி வெப்ப மின்வலுப் பொறி) மொத்த கிடைக்கத்தக்க இயலளவு 135 மெகாவாட்டுக்களினால் (6 சதவீதம்) மட்டும் 2,358 மெகாவாட்டிற்கு அதிகரித்தது. மேலும், 2004 இல் தனியார் துறைக்குச் சொந்தமான சிறு நீர் மின்வலு பொறிகள் 35 மெகாவாட்டுக்களை வழங்கின. இவ்வபிவிருத்திகள் நீர் மின்வலு: வெப்பவலு விகிதத்தினை 2004 இல் 54:46 என்ற விகிதத்திற்கு மாற்றின.

நடுத்தரக் காலத்தில் பல புதிய வலுப் பொறிகள் நடைமுறைக்கிடப்படுவதுடன் உருவாக்க இயலளவு ஏறத்தாழ 400 மெகாவாட்டுக்களினால் விரிவாக்கப்படும். எம்பிலிப்பிட்டியவில் நிருமாணிக்கப் பட்டுவரும் 100 மெகாவாட்டினை கொண்ட டீசல் வலுப்பொறி 2005 மேயில் தொழிற்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கெரவலப்பிட்டியாவில் நிருமாணிக்கப்பட்டுவரும் 300 மெகாவாட் மொத்த இயலளவைக் கொண்ட "இணைந்த சுற்று" வாயு விசையாளி செயற்றிட்டம் 2007 இல் முற்றுப்பெறவுள்ளது. உத்தேச புரோட்லாண்ட் நீர் மின்வலு செயற்றிட்டம் பற்றிய சாத்தியவள ஆய்வு இறுதியாக்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடலுக்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், நிலக்கரி வலு போன்ற குறைந்த உருவாக்கச் செலவினைக் கொண்ட வலு இயலளவை அதிகரிப் பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

குறைந்தளவு நீர் மின்வலு உருவாக்கம் காணப்பட்டபோதும், 2004 இல் மொத்த மின்வலு உருவாக்கம் 8,158 கிகாவாட் மணித்தியாலத்திற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஏற்கனவேயுள்ள

வரைபடம் 3.3
**சராசரித் தீர்வையும் மின்வலுச் செலவும்**




பொறிகள் அதேபோன்று அவசரகாலப் பொறிகள் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த வெப்பவலுவே காரணமாக இருந்தது. எனினும், புதிய வலுப் பொறியொன்று தொழிற்படத் தொடங்கியதன் காரணமாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு பகுதிக்கு மின்வலுவினை வழங்கும் சுண்ணாகத்தில் அமைந்துள்ள 20 மெகாவாட் வலுப்பொறியினைத் தவிர்ந்த அனைத்து அவசரகால வலுப்பொறிகளும் 2004 செத்தெம்பரில் நிறுத்தப்பட்டன.

முறையிலான இழப்புக்கள் 2000ஆம் ஆண்டின் ஏறத்தாழ 22 சதவீதத்திலிருந்து 2004 இல் 17.1 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்து ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 400 கிகாவாட் மணித்தியாலங்களைச் சேமித்தது. இது 100 மெகாவாட் இயலளவுடன் கூடிய மேலதிக நீர்வலுப் பொறி யொன்றினைக் கொண்டிருப்பதற்குச் சமமானதாகும். எனினும், முறையில் ஏற்படும் இழப்புக்கள் இன்னமும் உயர்வாக இருப்பதனால் நீண்ட காலத்தில் அனுமதிகூடிய மட்டமான ஏறத்தாழ 12 சதவீதத்தினை அடையும் விதத்தில் அவற்றினைக் குறைப்பதற்கு இலங்கை மின்சபை தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகவுள்ளது.

வலு உருவாக்க விரிவாக்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட அளவுக் கதிகமான தாமதங்கள், நிலக்கரி வலு போன்ற குறைந்த செலவினைக் கொண்ட பாரியளவு வலு மூலவளங்களின் உருவாக்கத்தினை நடைமுறைக்கிடாமை என்பனவற்றின் விளைவாக தோன்றிய போதுமானதற்ற இயலளவானது உயர்ந்த மின்வலுத் தீர்வைகளுக்கும் அடிக்கடி தோன்றும் வலுப் பற்றாக் குறைகளுக்கும் இட்டுச்சென்றது. இப்பற்றாக்குறைகள் இலங்கை மின்சபை மற்றும் நுகர்வோர் இருவரையும் உயர்ந்த செலவினைக் கொண்ட சிறிய இளலளவு மாற்று மூலங்களை நாடவைத்தன. அதிகரித்துச் செல்லும் உற்பத்தி மட்டங்களின் காரணமாக குறைந்து செல்லும் எல்லைச் செலவினை எடுத்துக்காட்டும் துறையொன்றில் காணப்படும் இச்சிக்கனமற்ற தன்மை காணப்படுவதானது உயர்ந்த இயலளவினைக் கொண்ட பொறிகளுக்கு சாதகமானதாகவுள்ளது.

2004 இல் வலு உருவாக்கச் செலவு அதிகரித்தமைக்கு, அவசரகால வாடகை வலு மூலம் வலுப்பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காக மேற் கொள்ளப்பட்ட குறுங்கால வழிமுறைகள் அதேபோன்று உயர்ந்த முறையிலான இழப்புக்கள் போன்ற மற்றைய வினைத்திறனற்ற தன்மை என்பன காரணங்களாக விளங்கின. இலங்கையின் போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இதன் தீர்வை வீதங்கள் ஏற்கனவே

உயர்வாகக் காணப்பட்டமையினால் இவ்வுயர்ந்த செலவுகளை நுகர்வோருக்கு மாற்றல் செய்வது ஊக்கம்குன்றச் செய்வதாக இருந்தது[3]. எனினும் உயர்ந்த செலவுகளை குறுங்காலத்தில் நுகர்வோருக்கு மாற்றல் செய்யும் அதேவேளையில், மின்வலு உற்பத்தியில் தற்போது காணப்படும் வினைத் திறனின்மைகளை சரி செய்வதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்படுவது முக்கியமானதாகும். அவ்வாறில்லாவிடின், நிறுவன ரீதியாகவும் கொள்கை வினைத்திறனின்மையினதும் உருவாக்கப்பட்ட சுமைகளை பொதுமக்கள் பெருமளவுக்கு தாங்கவேண்டியதாயிருக்கும்.

மின்வலுவினைக் கொண்டு செல்வதில் இலங்கை மின்சபை தனியுரிமையினைக் கொண்டிருந்ததுடன் அதன் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்கம்பனியுடன் இணைந்து, உதவு பங்கீட்டில் தனியுரிமையினைக் கொண்டிருந்தது. 2004 இல் இலங்கை மின்சபையினால் உருவாக்கப்பட்ட பங்கு 65 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. எனினும், தீர்வைத் திருத்தங்களும், வினைத்திறனின்மையினை ஒழிப்பதற்கான வழிமுறைகளும் இல்லாமையினால் 2004 இல் இதன் நிதியியல் நிலைமைகள் மேலும் மோசமடைந்து அதிகரித்த குறுங்காலக் கடன்பாடுகளுக்கு வழிவகுத்தது. இந்நிலைமையானது அரசிற்கான அதன் படுகடன் பணிக் கொடுப்பனவுகளை தாமதப்படுத்தியதுடன் இந்நிறுவனத்தின் ஆற்றல் வாய்ந்த தன்மை பற்றிய கரிசனைகளையும் தோற்றுவித்தது.

இத்துறையிலுள்ள வினைத்திறனின்மைக்கு தீர்வு காண்பதற்காக 2002 இல் நிறைவேற்றப்பட்ட மின்வலுத் துறை சீர்திருத்தச் சட்டத்தில் தொடரான பல சீர்திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டதுடன் இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான கொடை வழங்குநர்களின் ஆதவும் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. உத்தேச சீர்திருத்தங்கள் முக்கியமாக துறையினை ஒழுங்குவிதிகளை அகற்றுதல் மற்றும் இலங்கை மின்சபையின் முக்கிய செயற்பாடுகளை உருவாக்கம், கொண்டு செல்லல் மற்றும் விநியோகித்தல் என வெவ்வேறாக்கும் நடவடிக்கைகளின் மீது முக்கிய கவனத்தைச் செலுத்தின. இந்த உத்தேச சீர்திருத்தங்களின்கீழ், வலுத்துறை 2003 இல் நிறுவப்பட்ட பொதுவசதிகள் ஆணைக் குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், இச்சீர்திருத்தங்கள் 2004 இல் சாத்தியமாகாததுடன் அரச தொழில் முயற்சிகளில் எதிர்கால சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரசபையான முக்கியத்துவமிக்க தொழில் முயற்சிகள் முகாமைத்துவ அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

**பெற்றோலியம்:** 2004 இல் பெற்றோலியத்துறை பாரிய பன்னாட்டு விலை அதிர்வுகளினால் பாதிக்கப்பட்டது. 2004 இல் மசகெண்ணெய்யின் (பிறன்ட்) சராசரி பன்னாட்டு விலை 2003 இனைவிட 35 சதவீதத்தினால் உயர்வடைந்தது. விலைகளில் தாமதமாகவும் குறைந்த அளவிலும் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் எரிபொருளின் உள்நாட்டு நுகர்வில் தொடர்ந்தும் அதிகரிப்புக்களுக்கு இட்டுச் சென்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தினாலும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனியினாலும் உறப்பட்ட இழப்புக்களை உயர்வடையச் செய்தது. இது அரசாங்கத்தின் உதவுதொகை கொடுப்பனவுகளில் அதிகரிப்பு மற்றும் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட மோசமான தன்மை ஆகிய இரண்டிற்கும் வழிவகுத்தது. அதேவேளை நிலைமையினை மோசமாக்கும் விதத்தில் திட்டமிட்டவாறு விநியோகத்தில் மூன்றாந் தரப்பினர் சந்தைக்குள் நுழையாமையினால் வரவு செலவுத் திட்ட நிதியிடலுக்கான இடர்ப்பாடுகள் அதிகரித்தன. அவர்கள் நுழைந்திருப்பின் போட்டித்தன்மை மேலும் மேம்பாடடைந்து பெற்றோலிய விநியோகத்தின் தரம் மேலும் மேம்பாடடைந்திருக்கும்.

2004 இல் பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி 2003 இன் ஐ.அ.டொலர்கள் 838 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர்கள் 1,211 மில்லியன்களுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்து விலைகளில் ஏற்பட்ட 28 சதவீத அதிகரிப்பினையும் அளவில் ஏற்பட்ட 9 சதவீத அதிகரிப்பினையும் பிரதிபலித்தது. எனினும், முன்னர் கணக்கிடப்பட்டவாறு பன்னாட்டு விலைகளில் விரைவான அதிகரிப்புக் காணப்பட்டபோதும், உள்நாட்டு எரிபொருள் விலைகள், ஒருசில சந்தர்ப்பங்களைத் தவிர, 2002 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட விலையிடல் சூத்திரத்திற்கேற்ப உள்நாட்டு எரிபொருள் விலைகள் மேல்நோக்கிச் சீராக்கப்படவில்லை. பன்னாட்டு விலைகள் அதிகரித்த ஆறு மாதங்களின் பின்பு 2004 யூலையில் பெற்றோல் விலைகள் இலீற்றருக்கு ரூ.8.00 இனால் உயர்த்தப்பட்டது. 2004 ஒகத்தில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் முறையே லீற்றர் ஒன்றிற்கு ரூ.3.00 இனாலும், ரூ.4.00 இனாலும் உயர்த்தப்பட்டன. டீசல் மற்றும் பெற்றோல் விலைகள் மீண்டும் இரு பிரிவுகளாக கொழும்பு மாநகர எல்லைக்குள்ளும் அதற்கு வெளியேயும் பொருந்தத்தக்க விதத்தில் உயர்த்தப்பட்டன. டீசல் விலை கொழும்பு மாநகர எல்லைக்குள் ரூ.8 இனால் உயர்த்தப்பட்ட வேளையில், நகருக்கு வெளியே லீற்றருக்கு ரூ. 6 இனால்

3. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் கைத்தொழில் துறைக்கு ஏற்புடையதான சராசரி மின்தீர்வைக் கட்டணங்கள் ஐ.அமெரிக்க சதங்களில் பின்வருமாறு காணப்பட்டன. இலங்கை 700-7.50 இந்தோனேசியா 1.52-3.90, மலேசியா 2.63-10.52, சிங்கப்பூர் 4.23-6.78, தாய்லாந்து 2.89-7.01, பிலிப்பைன்சு 3.30-10.68.

உயர்த்தப்பட்டது. பெற்றோலின் விலை கொழும்பு மாநகர எல்லைக்குள் மாத்திரம் லீற்றருக்கு ரூ.2 இனால் உயர்த்தப்பட்டது. எனினும், மண்ணெண்ணெய்யின் விலைகள் 2004 சனவரிக்குப்பின் உயர்த்தப்படவில்லை. இத்திருத்தங்கள் உயர்ந்துசெல்லும் பன்னாட்டு விலைகளின் சூழலில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இழப்புக்களை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. இது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீது குறிப்பிடத்தக்களவு நிதியியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்து, அதனைப் "படுகடன் பொறி" யொன்றினுள் இறுக்கியிருக்கிறது. இதன் விளைவாக, அரசாங்கம் ரூ. 18 பில்லியன் (மொ.உ. உற்பத்தியில் ஏறத்தாழ 0.9 சதவீதம்) கொண்ட பாரிய உதவுதொகையினை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும், இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிக்கும் செலுத்த வேண்டியிருந்தமை வரவு செலவுத் திட்ட செயலாற்றத்தினை மோசமாகப் பாதித்ததுடன் இதன் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளை பயன்படுத்தாதவர்களின் மீது விகித சமமற்ற முறையில் நியாயமற்ற விதத்தில் சுமை ஏற்றப்

அட்டவணை 3.4

**பெற்றோலியத்துறையின் செயலாற்றம்**

| விடயம் | 2003 | 2004(அ) | சதவீத மாற்றம் 2003 | சதவீத மாற்றம் 2004(அ) |
|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ) | | | | |
| மசகெண்ணெய் | 1,995 | 2,200 | -13 | 10 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | 1,168 | 1,259 | -13 | 8 |
| திரவப் பெற்றோலிய வாயு | 141 | 148 | 12 | 5 |
| உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொன்கள்) | 15 | 15 | 6 | 0 |
| இறக்குமதிகளின் பெறுமதி (கொ.க.) | | | | |
| மசகெண்ணெய் (ரூ.மில்.) | 41,708 | 61,431 | 3 | 47 |
| (ஐ.அ.டொ.மில்.) | 432 | 607 | 2 | 40 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் (ரூ.மில்.) | 39,179 | 61,298 | 41 | 56 |
| (ஐ.அ.டொ.மில்.) | 406 | 604 | 40 | 49 |
| திரவப் பெற்றோலிய வாயு (ரூ.மில்.) | 4,502 | 6,040 | 19 | 34 |
| (ஐ.அ.டொ.மில்.) | 47 | 60 | 21 | 28 |
| மசகெண்ணெயின் சராசரி விலை (கொ.க.) (ஆ) | | | | |
| (ரூ. / பீப்பா) | 2,824 | 3,773 | 18 | 34 |
| (ஐ.அ.டொ. / பீப்பா) | 29.29 | 37.45 | 17 | 28 |
| ஏற்றுமதி அளவு ('000 மெ.தொன்கள்) | 111 | 128 | -48 | 15 |
| ஏற்றுமதிப் பெறுமதி (ரூ. மில்லியன்) | 3,501 | 5,779 | -12 | 65 |
| (ஐ.அ.டொ. மில்) | 36 | 57 | -13 | 58 |
| உள்நாட்டு விற்பனைகள் ('000 மெ.தொன்கள்) | 3,419 | 3,762 | 1 | 10 |
| சிறப்புப் பெற்றோல் (90 ஒக்டேன்) | 375 | 433 | 35 | 15 |
| ஈயக் கரியம் நீக்கிய பெற்றோல் (95 ஒக்டேன்) | 15 | 20 | 67 | 33 |
| தன்னியக்க டீசல் | 1,663 | 1,890 | -5 | 14 |
| சிறப்பு டீசல் | 42 | 36 | -11 | -14 |
| மண்ணெண்ணெய் | 207 | 204 | -10 | -1 |
| உலை எண்ணெய் | 715 | 747 | -8 | 4 |
| அவுட்டூர் | 139 | 170 | 22 | 22 |
| நப்தா | 102 | 96 | 79 | -6 |
| திரவப் பெற்றோலிய வாயு | 161 | 166 | 3 | 3 |
| உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ. / லீற்றர்) (இ) | | | | |
| பெற்றோல் (90 ஒக்டேன்) | 53.00 | 68.00 | 8 | 28 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | 56.00 | 71.00 | 8 | 27 |
| தன்னியக்க டீசல் | 32.00 | 42.00 | 7 | 31 |
| சிறப்பு டீசல் | 37.30 | 47.30 | 6 | 27 |
| மண்ணெண்ணெய் | 25.50 | 25.50 | 6 | 0 |
| உலையெண்ணெய் | | | | |
| 500 செக்கன்ட் | 24.80 | 26.30 | 8 | 6 |
| 800 செக்கன்ட் | 23.70 | 25.20 | 8 | 6 |
| 1000 செக்கன்ட் | 23.20 | 24.70 | 9 | 6 |
| 1500 செக்கன்ட் | 22.30 | 24.30 | 8 | 9 |
| 3500 செக்கன்ட் | 20.70 | 22.00 | 10 | 6 |
| திரவப் பெற்றோலிய வாயு (ரூ/ கி.கி) | | | | |
| செல் வாயு | 45.60 | 63.12 | -5 | 38 |
| லாவ்ப்ஸ் வாயு | 47.60 | 63.12 | 16 | 33 |

(அ) தற்காலிகமானவை.

(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அறிவிக்கப்பட்டவாறு.

(இ) கொழும்பு மாநகரப் பகுதியில் உள்ள விற்பனை நிலையங்களில் விற்கப்படும் பெற்றோல், டீசல் விலைகள் செத்தம்பர் 2004இல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.2.00 இனால் உயர்வடைந்தன.

மூலங்கள்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட செல் வாயு லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் லங்கா (பிறைட்) லிமிடட்

படுகின்றது. இவ்வுண்மை 2004 இறுதியில் இலங்கையின் மண்ணெண்ணெய் மற்றும் டீசலின் விலைகள் இந்தியா, வங்காளதேசம் மற்றும் பாக்கித்தானின் விலைகளை விடக் குறைவாக இருப்பதிலிருந்து தெளிவாகிறது.


2004 இல் முக்கிய பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி 2003 இன் 1 சதவீத வீழ்ச்சிக்கெதிராக 10 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வெப்ப மின்வலுவிற்கான டீசல் மற்றும் உலைஎண்ணெய்க்கான உயர்ந்த கேள்வியே முக்கிய காரணமாகும். எனினும், ஊர்தித் தொகுதியில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும் பெற்றோலிய நுகர்வின் வளர்ச்சி முன்னைய ஆண்டின் 35 சதவீதத்திலிருந்து 2004 இல் 15 சதவீதத்திற்கு குறைவடைந்தமைக்கு, இவ்வாண்டுக் காலத்தில் பெற்றோலிய விலைகள் 28 சதவீதத்தினால் அதிகரித்தமையை பெருமளவிற்கு பிரதிபலிப்பதாக இருந்தது. எனினும் டீசலுக்கான கேள்வி 2003 இன் 5 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக ஏறத்தாழ 14 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமைக்கு வெப்ப மின்வலு உருவாக்கத்திற்கான அதன் அதிகரித்த பயன்பாடே முழுக்காரணமாகும். மண்ணெண்ணெய்க்கான கேள்வி 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, இவ்வாண்டில் விலை மாற்றமின்றியிருந்தபோதும் மின்விநியோகம் விரிவடைந்தமையுடன் வெளிச்ச நோக்கங்களுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.

2003 மார்ச்சில் இலங்கையில் தொழிற்பாடுகளைத் தொடங்கிய இரண்டாவது விநியோகத்தரான இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி 170 எரிபொருள் நிரப்பு நிலையங்களூடாக நாடு முழுவதிலும் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் விரிவாக்கி வருகின்றது. மேலும் விநியோகத்தில் போட்டித் தன்மையினை அதிகரிக்கும் பொருட்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 107 எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூன்றாவது தரப்பினருக்கு வழங்குவதற்கு இனங்காணப்பட்டிருக்கிறது. அதேவேளை, அரச கொள்கையின் நியதிகளின்படி

வரைபடம் 3.4

**பன்னாட்டு மசகு எண்ணெய் விலைகள்: 2003 - 2004**

(பிறன்ட் - நியூயோர்க் முடிவு விலை)




தொழிற்பாட்டு வினைத்திறனை உயர்த்தும் குறிக்கோளுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் முக்கியத்துவமிக்க தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

நீர்க்கல எரிபொருளின் உயர்ந்த செலவு எரிபொருள் நிரப்பலுக்காக கொழும்பிற்கு வருகின்ற கலங்களின் வருகையினை ஊக்கமிழக்கச் செய்தது. லங்கா மறைன் சேர்விஸ் லிமிடெட்டினை தனியார் மயப்படுத்தியமையானது தேவையான அளவிற்கு விலைகளைக் குறைக்கவோ போட்டியை ஏற்படுத்தவோ இல்லை. இது இத்துறையில் மேலும் சீர்திருத்தங்கள் தேவைப்படுவதனை எடுத்துக்காட்டுகிறது.

அஞ்சல் துறையினைப் போன்றே, வலுத் துறையிலும் உள்ள தொழிலாளர் அமைப்புக்கள் இவ்விரு நிறுவனங்களுடனும் தொடர்பான எந்த வகைச் சீர்திருத்தங்களுக்கெதிராகவும் வலுவான எதிர்ப்புப் பிரச்சாரங்களை உறுதியாகக் கொண்டிருக்கின்றன போல் தெரிகின்றது. இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பலயீனமான நிதியியல் நிலைமைகள், வங்கித்தொழில் துறைக்கான திரண்ட படுகடன் கடப்பாடுகளுடன் சேர்த்து இறுதியில் அவற்றினை கடன்தீராற்றலற்ற நிலைமையொன்றிற்கு இட்டுச்செல்லாமல் விலைத் திருத்தங்கள் அவற்றின் நடைமுறை இழப்புக்களைக் குறைப்பதற்கு அவற்றினை இயலச் செய்கின்ற வேளையில், நீண்டகால கடன் தீராற்றல் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மீள் மூலதன மயப்படுத்தல் அவசியமானதாகும். எதிர்ப்பு பிரச்சாரங்கள் வேலை வாய்ப்பினை இழக்கச் செய்துவிடும் என்ற பயத்தின் விளைவாகத் தோன்றிய எண்ணத்தின் காரணமாக உருவாகியிருக்க கூடுமெனினும் இவ்விரு பாரிய நிறுவனங்களையும் மீட்பதற்கு தேவையான சீர்திருத்தங்களைச் செய்யத் தாமதிப்பது, வரி செலுத்துவோர் மீது சுமைகளை ஏற்றுவதற்குப் புறம்பாக, அவர்களின் அச்சங்களை விரைந்து நிகழச் செய்துவிடக்கூடும். தற்பொழுது, சீர்திருத்தங்கள் தொடர்பில் இணக்கப்பாடொன்றினைக் காணவும் முன்னோக்கிய நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதற்கும் தொடர்பான அனைத்து நலவுரித்துடையோர்களிடையேயுமான வெளிப்படையான கலந்துரையாடலொன்று அவசியமானதாகும்.

## போக்குவரத்து

நிலம், கடல், நீர்வழிகள் மற்றும் வான் போக்குவரத்து என்பனவற்றினை உள்ளடக்கிய போக்குவரத்து வலையமைப்பு பொருளாதார உட்கட்டமைப்பில் முக்கியமான பங்கொன்றைக்

கொண்டுள்ளது. போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறனானது உற்பத்தியாக்க அளவு, விநியோகத்திலான வேகம் பாதுகாப்பு மட்டம் மற்றும் இறுதியாக நாட்டின் போட்டித் தன்மை என்பன வற்றினை பெருமளவுக்கு நிர்ணயிக்கின்றது.

இலங்கையில், உள்நாட்டுப் போக்குவரத்தின் முக்கியத்துவம் மிக்க ஒரு போக்குவரத்து முறையாக வீதிப் போக்குவரத்து விளங்குகின்றது. கடல் மற்றும் நீர் வழிப் போக்குவரத்து உள்நாட்டுப் போக்குவரத் திற்கு மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் படுகின்றது. பாதுகாப்பு நிலைமைகள் முன்னேற்றம் கண்டமையின் காரணமாக உள்நாட்டுப் போக்குவரத்தில் வான் போக்குவரத்து பிரபல்யமான ஒரு வகையாக மாறி வருகின்றது.

இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளமையின் காரணமாக, பன்னாட்டு கடற் போக்குவரத்தில் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த அனுகூலங்களை அனுபவித்து வருகின்றது. எனினும், நாட்டின் போட்டித் தன்மையானது துறைமுகப் பணிகளின் வினைத்திறன் மீதும் இவ்வலையமைப்பு உள்நாட்டுப் போக்குவரத்து வலையமைப்புடன் எவ்வாறு நன்முறையில் இணைக்கப்பட்டுள்ளது என்பதிலுமே பெருமளவிற்கு தங்கியுள்ளது. வான் போக்குவரத்தானது வானூர்தி தரையிறங்குகின்ற உரிமைகளுடனான பன்னாட்டு பாதுகாப்பு முறைகளினால் பாதிக்கப்படுகின்றது. புதிய சிவில் வான் போக்குவரத்து தாராள மயப்படுத்தல் கொள்கைகள், வான் போக்குவரத்தில் பெருமளவு வினைத்திறனுக்கு வழிவகுக்கக் கூடுமாகையால் இதன் மூலம் இலங்கை இப்பிராந்தியத்தின் வான் போக்குவரத்து மையமாக மாற்றமடையும்.

## வீதிப் போக்குவரத்து

**வீதி அபிவிருத்தி:** இலங்கை வீதிப் போக்குவரத்தின் உள்ளடக்கப் பரப்பு பன்னாட்டு நியமங்களின்படி போதுமானதாக இருந்தபோதும் இவ்வீதிகளின் தரம் பாரிய மேம்பாடுகளை தேவைப்படுத்துகின்றன. இலங்கையில் வீதி அபிவிருத்தியுடன் இணைந்து காணப்படும் முக்கியமான பிரச்சனைகளாக திட்டமிடப்பட்ட வீதிச் செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்துவதில் காணப்பட்ட மிகையான தாமதங்கள், புதிய வீதிச் செயற்றிட்டங்களுக்குத் தேவையான நிதிகளைப் போதுமான அளவிற்குப் பெற முடியாமல் போனமை, மற்றும் ஏற்கனவேயுள்ள வீதி வலையமைப்பினைப் பேணுவதற்கான நிதி போதாமை என்பன காணப்பட்டன. நிதிப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக முறையே பெற்றோல் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 இனையும் டீசலின் மீது ரூ.0.50 இனையும் விதிப்பதன் மூலம் வீதி நிதியமொன்றினை உருவாக்குவதற்கு 2003 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது. எனினும், தீர்வை நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் முன்மொழியப்பட்டவாறு நிதியம் இன்னமும் ஏற்படுத்தப் படவில்லை. நிதிப் பற்றாக்குறையினை மூலதனச் சந்தைகளிலிருந்து நிதிகளை திரட்டுவதன் மூலமும், கட்டு தொழிற்படுத்து, சொந்தமாக்கு, கட்டு, தொழிற்படுத்து, மாற்றல்செய் என்ற ஒழுங்குமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும் அத்துடன் அரசிறை உருவாக்க முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் தீர்த்துக் கொள்ளலாம்.

இலங்கையின் மோசமான வரவு செலவுத் திட்ட நிலைமைகளுடன் பொதுவாக இணைந்து காணப்படும் பிரச்சனையான வீதி விரிவாக்கம் மற்றும் பேணலுக்கான நிதிப் பற்றாக்குறையினால் தரமேம்பாடு பாதிக்கப் பட்டது. பொதுவான வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு களின் காரணமாக, மற்றைய கூடியளவு அவசர தேவைகளுக்கு முன்னுரிமையளிக்கப் பட்டமையினால் வீதி அபிவிருத்தியும் பேணலும் பின்தள்ளப்பட்டன. எனவே இத்துறையிலுள்ள பிரச்சனைகளைக்கு தீர்வு காண்பதற்கு வரவு செலவுத் திட்ட சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவது முற்தேவையாகக் காணப் படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை 11,661 கிலோ மீற்றர் தேசிய வீதிகளையும் (ஏ மற்றும் பீ வகுப்புக்கள்) 4,429 பாலங்களையும் பேணுகிறது. இது தேசிய வீதிகளைப் பேணுவதற்காகவும் புத்தாக்கம் மற்றும் மீள்கட்டுமானம் செய்வதற்காகவும் 2004 ஆம் ஆண்டில் ரூ.11,199 மில்லியன்களைச் செலவிட்டுள்ளது. இது 2003 வரவு செலவுத் திட்டத்தினை விட சிறிதளவு குறை வானதாகும். மொத்தச் செலவினத்தில், ரூ.4,942 மில்லியனும், ரூ.1,211 மில்லியனும் முறையே தற்போதுள்ள வீதி வலையமைப்பின் புத்தாக்கத்திற்கும், வழமையான பேணலுக்கும் செலவிடப்பட்ட வேளையில் ரூ.1,833 மில்லியன் புதிய கட்டுமானங்களின் மீது செலவிடப்பட்டது. மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் முறையே 15,000 மற்றும் 75,000 கிலோ மீற்றர் மாகாண வீதிகளையும் (சீ மற்றும் டீ வகுப்புக்கள்), உள்ளூர் வீதிகளையும் (ஈ வகுப்பு) பேணின. நிதிப் பற்றாக்குறைப் பிரச்சனையானது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளில் மிகக் கடுமையாகக் காணப்பட்டதுடன் இது கிராமிய மற்றும் மாகாண வீதிகளின் பேணல் வேலைகள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கும் வழிவகுத்தது.

வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை முக்கிய நெடுஞ்சாலைகளின் புதிய நிருமாணம், வீதிகளின் புத்தாக்கம் மற்றும் வீதி நெரிசல்களைக் குறைப்பதற்கான வழிமுறைகள் உள்ளிட்ட பல

வெளிநாட்டு நிதியிடல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது. தென்பகுதிக்கான நெடுஞ்சாலை செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி என்பனவற்றினால் நிதியிடப்பட்ட ரூ.29 பில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்பகுதி நெடுஞ்சாலையின் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட பிரிவின் கட்டுமான வேலைகள் (குருந்து கக கெட்டேகம-கொடகம) 2003 இன் தொடக்கத்தில் ஆரம்பமாகியதுடன் 2006 இல் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பன்னாட்டு ஒத்துழைப் பிற்கான யப்பானிய வங்கியினால் நிதியிடப்பட்ட பிரிவு (கொட்டாவ-குருந்து கக கெட்டேகம) 2005 இல் தொடங்கவுள்ளது. 2000 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்ட உத்தேச கொழும்பு-கட்டுநாயக்க விரைவுப்பாதையை அரச, தனியார் பங்குடமை அடிப்படையில் மீண்டும் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ ரூ.17 பில்லியனாக மதிப்பிடப்பட்ட செயற்றிட்ட செலவினைக் கொண்ட கொழும்பு வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்றிட்டம் அளவீட்டு தேசப்படத்தினை நிறைவுசெய்யும் கட்டத்தில் இருக்கிறது. கொழும்பு-கண்டி விரைவுப்பாதையை ரூ.29 பில்லியன் மதிப்பிடப்பட்ட செலவுடன் மலேசிய அரசாங்கத்தின் உதவியுடன் கட்டு, தொழிற்படுத்து மாற்றல் செய் என்ற அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப் படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் வீதி வலையமைப்பு முன்னேற்ற செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்துகின்றது. இச்செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு ஒத்துழைப் பிற்கான யப்பானிய வங்கி என்பனவற்றிலிருந்தான உதவியுடன் 345 கிலோமீற்றர் வீதிகளின் புத்தாக்கத்தினையும் 47 பாலங்களின் மேம்பாட்டினையும் உள்ளடக்கியிருக்கிறது. இவ்வாண்டில், கொரியாவின் உதவியுடனான பலாங்கொட-பண்டாரவெல வீதியின் புனரமைப்பும் மேம்பாடும் தொடங்கியுள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காணப்படும் வீதி நெரிசல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, கடற்கரையோரச்சாலைச் செயற்றிட்டம், டுப்பிளிக்கேசன் வீதிச் செயற்றிட்டம் மற்றும் நுகேகொட, கம்பகா, பன்னிப்பிட்டிய, ஊறுகொடவத்தை ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைத்தல் என்பன உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபை இனம்கண்டிருக்கிறது. எனினும் இவை யாவும் வரவு செலவுத் திட்டத்திலான கட்டுப்பாடுகள் காரணமாக தாமதிக்கப்பட்டுள்ளன. 'மகா நெகும' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2004 இல் பல கிராமப்புற வீதிகள் ரூ.57 மில்லியன் செலவில் மேம்படுத்தப் பட்டனவெனினும், தேவைகளுடன் ஒப்பிடுகையில் இவை சற்றேனும் போதுமானவையல்ல. உள்ளூர் நிதியுடன் மற்றைய பல வீதி மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.

சுனாமியின் காரணமாக நாட்டின் மேற்கு, தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு கரையோரப் பகுதிகளிலுள்ள பல வீதிப் பிரிவுகளும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. தேசமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களின் மீள்கட்டுமானச் செலவு ரூ.1,035 மில்லியன்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் அல்லது கொடை வழங்குநர்களின் மூலமாக நிதி வழங்கப்படுகின்ற தற்போதைய முறைகளிலிருந்தும் விலகி புதிய முறைகளில் வீதிகளை அபிவிருத்தி செய்வது பற்றி இலங்கை சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும். வீதிப் பயன்பாட்டுக்காக பயன்படுத்துவோரினால் கட்டணத்தை செலுத்துவதற்கு பணிக்கப்படின் நிதியிடலுக்காக வரவு செலவுத் திட்டத்தின் மீது தொடர்ந்தும் தங்கியிருப்பதனை தவிர்த்துக் கொள்ள முடியும். குறிப்பாக நகர மையங்களிலுள்ள வீதிப் பயன்படுத்துநர்கள், கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் வீதி வலையமைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படாதமையின் விளைவாக எழும் வீதி நெரிசல்களின் காரணமாக போக்குவரத்து நகர்வுகள் மெதுவாக இடம்பெறுவதனால் பாதிக்கப்படுகின்றனர். இப்பிரச்சனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் மிகுந்த பெறுமதியான வேலையாள் நேரத்தையும் நாடு இழக்கின்றது.

**வீதிப் பயணிகள் போக்குவரத்து:** தனியார் பேரூந்து தொழிற்பாட்டாளர்களினாலும் கொத்தணி பேரூந்து கம்பனிகளினாலும் வழங்கப்பட்ட வீதிப் பயணிகள் போக்குவரத்து இலங்கையின் மொத்த பயணிகள் போக்குவரத்தில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு பங்களித்தது. மீதிக்கு இலங்கைப் புகைவண்டியும் (7 சதவீதம்), தனிப்பட்ட ஊர்தித் சொந்தக்காரர்களும் (13 சதவீதம்) பங்களித்தனர். 2004 இல் வீதிப் பயணிகள் போக்குவரத்தின் தரம் குறிப்பிடத்தக்க முன்னேற்ற மெதனையும் காட்டாததுடன் கடந்த சில தசாப்தங்களாக நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்ந்தும் வளர்ந்து வருகின்றது. போதுமானதற்ற பணிகள், மோசமான தரம், அதிகரித்து வருகின்ற விபத்துக்கள் என்பனவே அரச வீதிப் போக்குவரத்துப் பணிகளிலுள்ள முக்கியமான பலவீனங்களாகக் காணப்படுகின்றன. மேலும், கொத்தணி பேரூந்துக் கம்பனிகள் மிகையான தொழிற்படையின் காரணமாக உயர்வடைந்த செலவு, போதுமானதற்ற தொழிற்படு மூலதனம், குறைந்த முதலீடு பேரூந்துகளின் பற்றாக்குறை, வீழ்ச்சியாகவும்

வருமானம் என்பனவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, கொத்தணி பேரூந்து கம்பனிகள் பாரிய இழப்புக்களுடன் தொழிற்பட்டு வருவதுடன், இது அவற்றினை அரச உதவிகளின் மீது தங்கியிருக்க வைத்திருக்கிறது.

தேசிய பேரூந்து கட்டணக் கொள்கைகளின் நியதிகளின்படி, டீசலின் விலை இலீற்றர் ஒன்றிற்கு ரூ.4.00 இனால் அதிகரித்தமை, மற்றைய தொழிற்பாட்டுச் செலவுகளின் உயர்வு என்பன காரணமாக 2004 செத்தெம்பரிலிருந்து கட்டணங்கள் 9 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தில் உயர்த்தப்பட்டன. 2004 செத்தெம்பரில் டீசல் விலைகள் இலீற்றருக்கு ரூ.6.00 இனால் உயர்த்தப் பட்டதன் காரணமாக பேரூந்து கட்டணங்கள் 2004 ஒத்தோபரிலிருந்து 6 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தினால் மீண்டும் உயர்த்தப் பட்டன. பேரூந்துக் கட்டணம் தொடர்பான அரசின் கட்டுப்பாடுகள், பயணிகளைப் பாதுகாப்பதற்காகச் செய்யப்பட்டுள்ளன போல் தோன்றுகின்றதெனினும், இதே பாதுகாப்புக்கள் அவர்களுக்கு வசதிகளற்ற, நீண்ட பயணநேரம், விபத்துக் களுக்காளாகக் கூடிய அதிகளவு சாத்தியங்கள், உற்பத்தியாக்கத்தில் பொதுவான குறைப்பு ஆகிய வழிகளின் மூலமாக கூடியளவு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இத்துறையின் நீண்டகால உறுதிப் பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு செலவு அதிகரிப்புக்களை இயல்பாகவே கணக்கில் எடுக்கக்கூடிய தாராளமான பேரூந்துக் கட்டணக் கொள்கையொன்று நடைமுறைக்கிடப்பட வேண்டும்.

போக்குவரத்து அமைச்சின் உபாய நடவடிக்கைத் திட்டத்திற்கு 2004 மேயில் அமைச்சரவை ஒப்புத லளித்தது. இது பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்து தொடர்பான முக்கிய அனைத்து அம்சங் களையும் உள்ளடக்கியிருந்தது. இத்திட்டமானது

அட்டவணை 3.5

**போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள்**

| விடயம் | 2003 | 2004 (அ) | சதவீத மாற்றம் 2003 | சதவீத மாற்றம் 2004(அ) |
|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்ணிக்கை) | 181,502 | 223,842 | 60.1 | 23.3 |
| பேருந்துகள் | 1,949 | 2,167 | 36.4 | 11.2 |
| தனியார் ஊர்திகள் | 21,184 | 19,116 | 76.5 | -9.8 |
| முச்சில்லு வண்டிகள் | 36,204 | 43,789 | 73.4 | 21.0 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 13,268 | 10,736 | 54.4 | -19.1 |
| உந்து ஈருருளிகள் | 86,877 | 124,474 | 58.6 | 43.3 |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | 11,014 | 10,703 | 34.9 | -2.8 |
| நில ஊர்திகள் | 11,006 | 12,857 | 46.3 | 16.8 |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ('000) | 8,300 | 8,402 | -2.0 | 1.2 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 4,627 | 4,684 | 13.4 | 1.2 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 129 | 134 | -3.5 | -3.9 |
| மொத்த வருவாய் (ரூ.மில்லியன்) | 1,321 | 1,678 | -3.0 | 27.0 |
| நடைமுறைச் செலவு (ரூ.மில்லியன்) | 3,383 | 4,328 | 1.7 | 27.9 |
| தொழிற்பாட்டு இழப்பு (ரூ.மில்லியன்) | 2,062 | 2,650 | 45.6 | 28.5 |
| மூலதனச் செலவு (ரூ.மில்லியன்) | 1,437 | 1,732 | -13.8 | 20.5 |
| 3. பிரதேச பேருந்துக் கம்பனிகள் | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 334 | 296 | -15.4 | -11.4 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 17,446 | 14,537 | -14.6 | -16.7 |
| மொத்த வருவாய் (ரூ.மில்லியன்) | 8,432 | 7,887 | -9.2 | -6.5 |
| தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்) | 10,896 | 11,403 | -5.1 | 4.7 |
| தொழிற்பாட்டு இழப்பு (ரூ.மில்லியன்) | 2,464 | 3,516 | 12.2 | 42.7 |
| 4. சிறிலங்கன் எயார்லைன்ஸ் | | | | |
| பறந்த மணித்தியாலங்கள் (மணித்தியாலம்) | 49,144 | 61,075 | 17.2 | 24.3 |
| பறந்த பயணிகள் கிலோமீற்றர்கள் (மில்லியன்) | 6,926 | 8,316 | 12.1 | 20.1 |
| பயணிகள் சுமைக் காரணி (%) | 76 | 73 | 0.0 | -3.9 |
| நிறைச் சுமைக் காரணி (%) | 52 | 55 | 18.2 | 5.8 |
| சரக்கு (மெ.தொன் '000) | 64 | 79 | 42.2 | 23.4 |
| தொழில் நிலை (எண்ணிக்கை) | 4,095 | 5,107 | 3.8 | 24.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம்
இலங்கைப் புகைவண்டிப் பகுதி
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
இலங்கை சிவில்வான் போக்குவரத்து மேலாண்மைச் சபை
சிறிலங்கன் எயார்லைன்ஸ்

பயனுறுதிமிக்க நேர அட்டவணைகளைத் தயாரிப்பது, அலுவலர்களுக்கும் ஓட்டுநர்களுக்கும் பயிற்சியளிக்கும் ஏற்பாடு, 1,000 பேரூந்து தரிப்பு நிலையங்களைக் நிர்மாணித்தல், பள்ளிக்கூட பேரூந்துப் பணிகளை மீளத் தொடங்குதல், கிராமப்புறங்களின் தொழிற் பாடுகளுக்கு உதவு தொகைகளை வழங்குதல், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்திற்கு தேவையான திருத்தங்களைக் கொண்டுவருதல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

கடந்த காலங்களில் கொத்தணி பேரூந்துக் கம்பனிகளை மீளமைப்பதற்கு பல தடவைகள் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அவை வெற்றியளிக்கவில்லை. 2004 இல் கொத்தணி பேரூந்துக் கம்பனிகள் முக்கியத்துவமிக்க தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

**புகைவண்டிப் போக்குவரத்து:** தற்பொழுது, இலங்கைப் புகைவண்டிப் பகுதி நாட்டின் அரச பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருள் போக்குவரத்தில் முறையே ஏறத்தாழ 7 சதவீதத்திற்கும், 2 சதவீதத் திற்கும் பங்களிக்கின்றது.

புகைவண்டிப் போக்குவரத்தின் தனியுரிமை யானது விலையிடல், முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் என்பனவற்றில் காணப்படுகின்ற நெகிழ்ச்சி யற்ற தன்மைகளினால் பெரும்பாலும் தோன்றிய பல முக்கிய பலயீனங்களினால் பாதிப்புக்குள்ளாகியதுடன் இது ஒருபுறம் பணிகளின் தரம் மோசமாக வீழ்ச்சியடைவதற்கும் மறுபுறம், பாரிய தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் தேறிய இழப்புக்களுக்கும் இட்டுச்செல்கின்றது. இத்தொழிற்பாட்டு இழப்புக்கள் புகைவண்டிப் பாதைகளின் அபிவிருத்தியை பாதித்ததுடன், புகைவண்டித் தொடர்பெட்டிகள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு முறைகள் என்பன வற்றின் வலுப்படுத்தல் மற்றும் பேணலை அனுமதிக்காது இலங்கை புகைவண்டிப் பகுதி வரவு செலவுத் திட்ட ஆதரவில் தொடர்ந்தும் பெருமள விற்கு தங்கியிருப்பதற்கும் நிர்ப்பந்திக்கிறது.

இலங்கைப் புகைவண்டிப் பகுதி 1,445 கிலோ மீற்றர் நீளமான புகையிரதப் பாதையினைக் கொண்டிருந்தபோதும், வடபாதையில் வவுனியாவிற்கு அப்பாலும், தலைமன்னார் பாதையில் மதவாச்சிக்கு அப்பாலும் பாரிய சேதங்களின் காரணமாகப் பணிகளை இடை நிறுத்தியுள்ளமையினால் அது 1,200 கிலோமீற்றர் பாதைகளில் மட்டுமே தொழிற்படுகிறது. தற்போதுள்ள பாதையில் ஏறத்தாழ அரைப்பங்கு ஆகக் குறைந்த தரத்திற்கும் கீழாக காணப்படுவதுடன் மிகவும் குறைந்த வேக எல்லையினையும் உயர்ந்த விபத்து இடர்நேர்வுகளையும் கொண்டிருக்கிறது.

தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ள புகைவண்டி தொடர்கள் தேவையான மட்டத்தில் ஏறத்தாழ 85 சதவீதமாக மட்டுமே உள்ளன. 2004 இறுதியில் இலங்கை புகைவண்டிப் பகுதி 131 எந்திரங்களையும், வலுப் பொறிகளையும் மட்டுமே கொண்டிருந்தபோதும் திருப்திகரமான பணிகளை வழங்குவதற்கு இதற்கு 153 எந்திரங்கள் தேவையாக இருந்தன. பெரும்பாலான எந்திரங்களும் வலுப்பொறிகளும் 25 ஆண்டுகளுக்குமேல் பழைமையானவையாக இருந்தவேளையில் புகைவண்டிப் பெட்டிகளில் 75 சதவீதமானவை 15 ஆண்டுகளுக்கும் கூடுதலான பழைமை வாய்ந்தனவாக இருந்தன. தொழிற்பாட்டு கண்காணிப்பு முறையானது வலையமைப்பில் ஒரு பகுதியினை மட்டுமே உள்ளடக்கியிருந்ததுடன் அவை புதுப்பிக்கப்படவுமில்லை.

2004 இல் தொழிற்படுத்தப்பட்ட புகைவண்டிக் கிலோ மீற்றர்கள் 2003 இன் 8.3 மில்லியன் கிலோ மீற்றர்களிலிருந்து 8.4 மில்லியன் கிலோமீற்றர்களுக்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், பயணிகள் கிலோ மீற்றர்கள் (இது பயணிகளின் எண்ணிக்கையினையும் அதேபோன்று தூரத்தினையும் கணக்கில் கொள்கிறது) முன்னைய ஆண்டிலும் பார்க்க சிறிதளவு மேம்பட்டமைக்கு போக்குவரத்துப் பணிகளின் மாற்று வகைகளின் கட்டணத்திலும் பார்க்க இதன் கட்டணம் குறைவாக இருந்தமையே காரணமாகும்.

2004 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் மொத்த வருமானம் 27 சதவீதத்தினால் அதிகரித் தமைக்கு 2004 இல் புகைவண்டிக் கட்டணங்களில் செய்யப்பட்ட 50 சதவீத அதிகரிப்பே முக்கிய காரணமாகும். எரிபொருள் செலவு, சம்பளம், மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் பெருமளவு காரணமாக தொழிற்பாட்டுச் செலவும் 28 சதவீதத் தினால் அதிகரித்தது. இதன் விளைவாக, இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு 2004 இல் ரூ.2,650 மில்லியனுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்து வரவு செலவுத் திட்டத்தின் மீது பாரிய சுமையினை ஏற்படுத்தியது.

இலங்கை புகைவண்டிப் பகுதியின் இக்குறை பாடுகளை நிவர்த்திப்பதற்காக, 1993 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க இலங்கை புகைவண்டி அதிகாரசபைச் சட்டத்தின் நியதிகளின்படி இது 2003இல் அதிகார சபையாக மாற்றியமைக்கப்பட்டது. இந்நடவடிக்கையின் நோக்கம் இதனை வர்த்தக ரீதியான தொழில் முயற்சியாக இயக்கும் விதத்தில் தேவையான நெகிழ்ச்சித் தன்மையினையும் வரவு செலவுத் திட்ட சுதந்திர த்தினையும் வழங்குவதேயாகும். எனினும், தொழிலாளர் குழப்பங்களின் காரணமாக, 2005 சனவரியில் இலங்கைப் புகைவண்டித் திணைக்களம் மீளநிறுவப்பட்டதுடன் எந்த ஒரு மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டமும் தற்பொழுது

தீர்மானங்களை மேற்கொள்வதில் நெகிழ்ச்சித் தன்மையும், நிதியியல் சுதந்திரமும் போதுமானளவில் இல்லாத அரச திணைக்களத்தின் நிறுவன அமைப்பொன்றினுள்ளேயே நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, எந்த ஒரு மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கும் முன்பாக முன்னேற்பாட்டு நடவடிக்கையாக, நிருவாக ரீதியான மற்றும் நிதியியல் ஒழுங்குகளின் தடைகளிலிருந்தும் இலங்கைப் புகைவண்டிப் பகுதிக்கு விலக்களிப்பதும் வர்த்தகத் தொழில்முயற்சியொன்றாக தொழிற்படுவதற்கு இதனை அனுமதிப்பதும் அவசியமானதாகும்.

**விமானப் போக்குவரத்து:** யுத்தநிறுத்தத்தின் பயனாக கடந்த மூன்றாண்டுகளிலும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வான் பயணங்கள் இரண்டும் அதிகரித்தன. வான் போக்குவரத்துத் துறைக்கு செய்யப்பட்ட இன்றியமையாத சீர்திருத்தங்கள் ஒழுங்குவிதிகள் பெருமளவில் அகற்றப்படுவதற்கும், நாட்டிற்குள் பன்னாட்டு வானூர்திகளும், சுற்றுலாப் பயணிகளும் வருவதனைக் கவருவதற்கான இருபுடை தாராள மயமாக்கப்பட்ட உடன்படிக்கைகளை மேற் கொள்வதற்கும் வழியமைக்கிறது.

2004 ஆம் ஆண்டுப் பகுதியில் மூன்று உள்நாட்டு வான் பயண நிறுவனங்கள் தொடர்ந்தும் தொழிற் பட்டன. முதலாவது உலங்கு வானூர்திப் பணி எட்டரை ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் 2004 யூலையில் மீண்டும் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளைத் தொடங்கியது. உள்நாட்டு வான் போக்குவரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் சிறீலங்கன் எயார்லைன் நீரில் இறங்கும் மூன்று வானூர்திகளை அறிமுகப்படுத்தியது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான பயணிகளின் வசதிக்காக ரூ.4 மில்லியன் செலவில் பலாலி வானூர்தி நிலையத்தில் இறங்குதுறை வசதிகள் அமைக்கப்பட்டன. எனினும், யாழ்ப்பாணத்திற்கான வீதிப்போக்குவரத்து மேம்பட்டமையின் காரணமாக வான் மூலம் பயணம் செய்யும் உள்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் உள்நாட்டு வான் தளத்தின் கட்டுமான வேலைகளை 2005 மார்ச்சில் தொடங்கு வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டில் தொழிற்பட்ட 30 வான் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் 2004 இல் இலங்கையில் 8 சரக்கு வான் நிறுவனங்கள் உட்பட 37 பன்னாட்டு வான் நிறுவனங்கள் தொழிற்பட்டன. 2004 இல் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தினூடாகப் பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கையும், கையாளப்பட்ட சரக்குத் தொன்களும் முறையே 25 சதவீதத்தினாலும், 18 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், மற்றைய வான் நிறுவனங்களின் நடவடிக்கைகள் விரிவடைந்தமையின் காரணமாக 2004 இல் தேசிய வான் நிறுவனமான சிறீலங்கன் எயர் லைன்சின் மூலம் பயணம் செய்த பயணிகள் மற்றும் கொண்டுசெல்லப்பட்ட சரக்குகளின் அளவு வீழ்ச்சியடைந்தது.

சிவில் வான் போக்குவரத்து திணைக்களத் திற்குப் பதிலாக 2002 இல் நிறுவப்பட்ட இலங்கை சிவில் வான் போக்குவரத்து அதிகாரசபை இலங்கைக்குள் சிவில் வான் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு மிகுந்த நெகிழ்ச்சிப் போக்கினை வழங்கிய வேளையில் வான் போக்குவரத்துக் கொள்கைகளை வடிவமைத்தல், வான் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டங்களையும் உபாயங்களையும் தயாரித்தல், வான் போக்குவரத்து பாதுகாப்புத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பன்னாட்டு சிவில் வான் போக்குவரத்து அமைப்புக்களுடன் இணைப்புக்களை மேற்கொள்ளல் என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருந்து வருகின்றது. துறைமுகங்கள், சிவில் வான் போக்குவரத்து அமைச்சு இலங்கைக்காக வான் போக்குவரத்து துறையின் முழுமையான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றை உள்ளடக்குகின்ற வான் போக்குவரத்துக் கொள்கையொன்றினை வடிவமைக்கும் வேலைகளைத் தொடங்கியுள்ளது. தாராளமயத்தினை மேலும் அதிகரிக்கும் பொருட்டு 1950 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க வான், கடல் போக்குவரத்துச் சட்டம் உத்தேச சிவில் வான் போக்குவரத்துச் சட்டத்தினால் அகற்ற ப்படும். இது சிவில் வான் போக்குவரத்தில் பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையினை வழங்கும்.

தற்போதுள்ள பிரதிகூலங்களின் விளைவாக முக்கியமான வான் நிறுவனங்களைக் கவர்வதில் இலங்கை பல குறைபாடுகளை எதிர்நோக்குகின்றது. அவற்றில், போதுமானதற்ற உட்கட்டமைப்பு, உயர்ந்த எரிபொருள் பணிச்செலவு, மோசமான வீதிப் போக்குவரத்து, மற்றும் போதுமானதற்ற தங்குமிட வசதிகள் போன்ற துணைப்பணிகளின் பற்றாக்குறை என்பன முக்கிய குறைபாடுகளாகக் காணப்பட்டன. இது இலங்கை அதன் புவியியல் சார்ந்த கேந்திர நிலையம் தொடர்பான அனுகூலங்களை பயன்படுத்தி முக்கிய மையமாக தோற்றம் பெறுவதனைத் தடுத்திருக்கிறது. மேற்குறிப்பிட்ட பலயீனங்கள் நிவர்த்திக்கப்பட்டாலொழிய, வான் போக்குவரத்தில் குறிப்பிடத்தக்களவு பங்கினை தென்னிந்திய வானூர்தி நிலையங்கள் உட்பட இப்பிர ாந்தியத்திலுள்ள மற்றைய வானூர்தி நிலையங்களிடம் இழக்க வேண்டிய ஆபத்துக் காணப்படுகிறது. ஆகவே தற்போது செயற்பாட்டிலுள்ள வானூர்தி நிலைய அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை விரைந்து நடை முறைப்படுத்துவது மிக முக்கிய மானதாகும். பண்டார நாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் விரிவாக்க

செயற்றிட்டத்தின் கட்டம் I தொடங்கியிருப்பதுடன் இது திட்டமிடப்பட்டவாறு 2005 இல் நிறைவடையும். செயற்றிட்டத்தின் கட்டம் II 2005 இல் தொடங்கும்.

**துறைமுகப் பணிகள்:** பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் பயனாக துறைமுகப் பணிகள் 2004 இல் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. 2004 இல் கொள்கலன் கையாளல் உட்பட மொத்தச் சரக்கு கையாளல் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் கையாளப்பட்ட கொள்கலன் தொகுதி 13 சதவீதத்தினால் அதிகரித்து கொள்கலன் தொகுதிக் கையாளலில் இதற்கு முன்னர் எப்பொழுதும் இல்லாத உயர்ந்த மட்டத்தினை அடைந்தது. உள்நாட்டுக் கொள்கலன் தொகுதி 17 சதவீதத்தினாலும், மாற்றிக் கப்பலேற்றல் 12 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

2004 இல் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஜெயா கொள்கலன் இறங்குதுறையின் சரக்கு கையாளல் வினைத்திறன் தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட விருதான 2003 இற்கான உற்பத்தியாக்கத்திற்கான தேசிய விருதினை வென்று கொள்வதற்கு வழியமைத்த செயலாற்றத்திலிருந்து மேம்பாடடைந்தது. சிறந்த செயலாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகளாக வேலை நேரம் நீடிக்கப்பட்டமை, ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டமை, ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டமை என்பன விளங்கின. வடக்கு அலைதாங்கி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கட்டப்பட்ட யுனிட்டி கொள்கலன் துறைமுக மேடை சரக்கு கையாளலுக்காக 2004 யூனில் திறந்து வைக்கப்பட்டது. இதன் விளைவாக, கொழும்பு துறைமுகத்தின் கொள்கலனைக் கையாளும் இயலளவு ஆண்டொன்றிற்கு 250,000 இருபது அடிகளுக்குச் சமமான அலகுகளினால் அதிகரித்தது. 8,000-9,000 கொள்கலன்களை எடுத்துச் செல்லக்கூடிய பாரிய கப்பல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் ஆழமான பாதைகளுடன் கூடிய கொழும்பு தெற்கு துறைமுகத்தின் அபிவிருத்தி 2006 இன் ஆரம்பத்தில் தொடங்கி பாரிய கப்பல்கள் பணிக்கு இடப்படும் என எதிர்பார்க்கப் படுகின்ற காலப்பகுதியான 2009 அளவில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை நீர்க்கல எரிபொருள் நிரப்பு நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், காலி துறைமுகத்தை யப்பானின் நிதியிடலுடன் வெளித்துறைமுகத்தினை ஆழப்படுத்தி இரு துறைமுக மேடைகளை நிருமாணிப் பதன் மூலம் விரிவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் பிரதேச கைத்தொழில் களுக்கு பணிகளை வழங்குதல் என்பனவற்றினைக் முக்கிய நோக்காகக் கொண்டு திருகோணமலைத் துறை முகம் "துறைமுக நகரமாக" அபிவிருத்தி செய்யப்படும்.

2004 இல் கொழும்பு துறைமுகத்தினை வந்தடைந்த கொள்கலன் கப்பல்களின் எண்ணிக்கை 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தபோதும், அளவு அதிகரித்துள்ளமையானது பாரிய கொள்கலன் கப்பல்களின் வருகையினை பிரதிபலிப்பதாகவுள்ளது.

அட்டவணை 3.6
**துறைமுகப் பணிகள்**

| விடயம் | 2003 | 2004(அ) | சதவீத மாற்றம் 2003 | சதவீத மாற்றம் 2004(அ) |
|---|---|---|---|---|
| 1. வருகை தந்த கலங்கள் (எண்ணிக்கை) | 4,032 | 3,883 | -1 | -4 |
| கொழும்பு | 3,838 | 3,688 | 1 | -4 |
| காலி | 73 | 88 | -4 | 21 |
| திருகோணமலை | 121 | 107 | -39 | -12 |
| 2. கையாளப்பட்ட மொத்தச் சரக்கு ('000 மெ.தொன்) | 30,500 | 33,962 | 8 | 11 |
| கொழும்பு | 28,198 | 31,299 | 7 | 11 |
| காலி | 482 | 581 | -8 | 21 |
| திருகோணமலை | 1,820 | 2,082 | 20 | 14 |
| 3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து ('000 இ.ச.அ.) | 1,959 | 2,221 | 11 | 13 |
| 4. மாற்றிக் கப்பலேற்றலே கொள்கலன் ('000 இ.ச.அ.) | 1,371 | 1,531 | 13 | 12 |
| 5. தொழில் நிலை (எண்ணிக்கை) (ஆ) | 13,936 | 13,765 | -22 | -1 |
| கொழும்பு | 12,522 | 12,420 | -22 | -1 |
| காலி | 638 | 634 | -15 | -1 |
| திருகோணமலை | 776 | 711 | -22 | -8 |


(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மட்டும்

மூலங்கள்: இலங்கை துறைமுக மேலாண்மைச் சபை.
சவுத் ஏசியா கேற்வே ரேமினல்ஸ் லிமிடெட்

இ.ச.அ = இருபது அடிக்குச் சமமான கொள்கல அளவுகள்

வரைபடம் 3.5

**மொத்தக் கொள்கலன் கையாளலும் மாற்றுக் கப்பலேற்றல்களும்**




2004 இல் கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதந்த மரபு ரீதியான கப்பல்களின் எண்ணிக்கையும் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மரபு ரீதியான கப்பல்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமைக்கு சரக்குப் போக்குவரத்து வழமையான முறைகளிலிருந்தும் மிகுந்த சிக்கனமானதும் விரைவானதும் பாதுகாப்பானதுமான கொள்கலனிலிடல் முறைக்கு மாறிக்கொண்டமையே முக்கிய காரணமாகும். நீர்க்கல எரிபொருளினை பெறுவதற்காக வருகின்ற கப்பல்களின் எண்ணிக்கை அண்மைய ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்து வருவதுடன், 2004 இல் இது, 1993 இல் வருகைதந்த உச்ச மட்டமான 285கப்பல்களிலிருந்து வெறுமனே 14 கப்பல்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கான முக்கியமான காரணம் கொழும்பில் நீர்க்கல எரிபொருளின் உயர்ந்த விலைகளேயாகும். இவை சிங்கப்பூர் விலைகளிலும் பார்க்க மெற்றிக் தொன்னொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 80-100 வரை உயர்வானதாகக் காணப்பட்டன. வங்காள தேசத்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பயணிக்கின்ற கப்பல்கள் அத்தகைய பணிகளுக்காக கொழும்பு துறைமுகத்தினை கடந்து சிங்கப்பூருக்கு பயணிப்பது இதனை விளக்குவதாக அமைகின்றது.

துறைமுகப் பணிகள், பிராந்தியப் போட்டிகளிலிருந்து சிறப்பாக மத்திய கிழக்கு மற்றும் தென்னிந்தியாவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள புதிய துறைமுகங்களிலிருந்து புதிய சவால்களைத் தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றன. துறைமுகப் பணிகளின் வினைத்திறனிற்கு பங்களிக்கும் தொழில்நுட்பவியல் ரீதியான மேம்பாடுகள் விரைந்த வேகத்தில் இடம்பெற்று வருவதுடன் அத்தகைய அபிவிருத்திகளைப் பற்றி அசட்டையாக இருக்கும் எந்த ஒரு துறைமுகமும் போட்டியாளர்களினால் பின்தள்ளப்பட்டுவிடும். எனவே துறைமுகப் பணிகளை அபிவிருத்தி செய்வதற்கான எந்த ஒரு திட்டமும் தற்போதைய பிரச்சனைகள் மீது செலுத்துகின்ற கவனத்திலும் பார்க்க எதிர்காலத் தேவைப்பாடுகளின் மீது கூடியளவு கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.

## நீர் வழங்கலும் நீர்ப்பாசனமும்

வலுவான நீர் வழங்கலும் நீர்ப்பாசனமும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நீர் மூலவளங்களின் பயன்பாட்டில் உறுதிப்பாட்டினை எய்துவதற்கு மேம்பட்ட நீர் முகாமைத்துவ நடைமுறைகளும் வீண்விரயத்தையும் அளவுக்கதிகமான பயன்பாட்டினையும் தடுப்பதற்கு பொருத்தமான விலையிடலும் தேவைப்படுகின்றன.

இலங்கையைப் போலன்றி, மக்களின் அனைத்து தேவைப்பாடுகளையும் ஈடுசெய்யும் விதத்தில் போதுமானளவு நீர் கிடைப்பது பல நாடுகளில் பெரும் பிரச்சனையாக இருந்துவருகிறது. இக்குறையினை அங்கீகரிக்கின்ற விதத்தில் ஐக்கிய நாடு களினால் ஏற்படுத்தப்பட்ட புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகளில் ஒன்று 2,015 அளவில் ஒரு நாட்டிலுள்ள அனைத்து பிரசைகளும் பாதுகாப்பான குடிநீரையும் போதுமான சுகாதார வசதிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றது. இவ்விலக்கினை எய்தும் விதத்தில் இலங்கை, 2010 ஆம் ஆண்டளவில் குடித்தொகையில் குறைந்தது 85 சதவீதத்தினருக்காவது பாதுகாப்பான குடிநீரை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் நீர் மூலவளங்களின் நீண்டகால வலுவான தன்மைக்கு அச்சுறுத்தலாகவுள்ள இரு முக்கிய காரணிகளாக பொருத்தமற்ற விலையிடலும் ஒழுங்குவிதிகளிலுள்ள குறைபாடுகளும் காணப்படுகின்றன. குழாய் மூலமான குடிநீர், உதவுதொகைப் பிரிவொன்றுடன் கூடிய விலையொன்றிற்கு உட்பட்டதாகும். ஆனால் மற்றைய வடிவில் அமைந்த நீர் வழங்கல்கள் எந்த ஒரு விலையிடலுக்கும் உட்படாமல் இருப்பது சாத்தியமான மிகையான சுரண்டலுக்கும் வினைத்திறனற்ற பயன்பாட்டிற்கும் வழிவகுப்பதாகவுள்ளது. இது தொடர்பாக, இயற்கை நீர்வளத்தினைப் பயன்படுத்துவது தொடர்பாக

அட்டவணை 3.7

**தே.நீ.வ' வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல்**

| | 2003 | 2004 |
|---|---|---|
| நீர் வழங்கல் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை | 280 | 287 |
| இக்காலப்பகுதியில் புதிதாக வழங்கப்பட்ட மொத்த இணைப்புக்கள் | 49,789 | 57,491 |
| வழங்கப்பட்ட மொத்த இணைப்புக்கள் (இவ்வாண்டு முடிவில்) | 782,724 | 841,215 |
| மொத்த நீர் உற்பத்தி (மில்.கனமீற்றர்) | 357 | 367 |
| கணக்குக்கு வராத நீர் (%) | | |
| கொழும்புப் பெரும்பாகம் | 36.9 | 36.4 |
| பிராந்தியங்கள் | 31.1 | 29.4 |

மூலம்: தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை

*சிறப்புக் குறிப்பு 08*

## மகாவலி நீர்த்தேக்கங்களின் பேணல்

## தற்போதைய நிலையும் உருவாகிவரும் அச்சுறுத்தல்களும்

மகாவலி முதன்மைத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட அனைத்து முக்கிய செயற்றிட்டங்களும் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. தற்போது எதிர்கொள்ளப்படுகின்ற சவால் யாதெனில் இச்செயற்றிட்டங்களை எதிர்கால சந்ததிகளுக்கு ஆகக்கூடிய நன்மை கிடைக்கத்தக்க வகையில் ஆகக்குறைந்த இடர்நேர்வு, சுமையுடனும் பொருளாதாரம், சமூக வாழ்வு மற்றும் சூழலியலுக்கான பேணலாகும்.

அரசாங்கம் எதிர் கொண்டுள்ள இறை நெருக்கடிகள் காரணமாகவும் நீர்த்தேக்க பராமரிப்பு செலவினம் ஒரு முன்னுரிமை விடயமாக கருத்திற் கொள்ளப்படாததனாலும் பராமரிப்புக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி தேவைப்படுவதனைக் காட்டிலும் குறிப்பிடத்தக்களவு குறைவானதாக இருக்கின்றது. சில ஆண்டுகளுக்கொருமுறை இடம்பெறும் பாரிய திருத்தங்கள் தவிர பாரிய நீர்த்தேக்கங்களது வழக்கமான பராமரிப்புக்கு தேவைப்படும் செலவு

அட்டவணை 1 : மகாவலி நீர்த்தேக்க செயற்றிட்டங்களது முக்கிய பண்புகள்

| நீர்த்தேக்கம் | ஆரம்பித்த வருடம் | அணையின் உயரம் மீற்றர் | அணையின் அகலம் மீற்றர் | நீர் கொள்ளளவு மில். கியூபிக் மீற்றர் | நிறுவப்பட்ட கொள்ளளவு மெகாவற் | சராசரி வலு ஆண்டுகள் | நிர்மாணச் செலவ | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ரூ. மில் | ஐ.அ.டொ மில். |
| போவத்தென்ன | 1970 | 29.8 | 226 | 52 | 40 | 83 } | 550 | 101 |
| பொல்கொல | 1970 | 14.6 | 144 | 4.1 | - | - } | | |
| மாதுறுஓயா | 1978 | 41 | 1,090 | 597 | - | - | 2,660 | 170 |
| உல்ஹிட்டிய | 1979 | 25 | 4,000 | 268 | - | - | வி.கி. | வி.கி. |
| கொத்மலை | 1979 | 87 | 600 | 172 | 201 | 396 | 9,470 | 608 |
| விக்டோறியா | 1980 | 122 | 520 | 721 | 210 | 605 | 9,800 | 593 |
| ரன்தெனிகல | 1982 | 94 | 485 | 861 | 126 | 366 | 5,800 | 279 |
| ரன்தம்பை | 1987 | 41.5 | 420 | 22 | 50 | 103 | 3,200 | 109 |
| மொத்தம் | | | | | 627 | 1,553 | 31,480 | 1,860 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*
*விரைவு படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டமும் அதன் தாக்கமும் (1988) முனைவர் எச். என். எஸ் கருணாதிலக.*

தற்போது இலங்கை மகாவலி அதிகார சபையானது நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், மகாவலித் திட்டத்தின் கீழான நீர்ப்பாசன வசதிகள் என்பவற்றை முகாமை செய்துவருகின்றது. இலங்கை மின்சார சபை மின் நிலையங்களை இயக்கி வருகின்றது. இலங்கை மகாவலி அபிவிருத்தி சபை எவ்வகையான வருமானத்தையும் ஈட்டாத காரணத்தால் அதன் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்கு மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதிகளிலேயே முழுமையாக தங்கியிருக்கிறது. தற்போதைய ஏற்பாடுகளின்கீழ் இலங்கை மகாவலி அபிவிருத்தி சபை அது சேமிக்கும் நீரை மின் உற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கும், பயிர்ச் செய்கை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக வேளாண்மையாளர்களுக்கும் கட்டணமின்றி வழங்கி வருகின்றது.

ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.300 மில்லியன் ஆகும். எனினும், உண்மையில் பெறப்பட்ட தொகை மிகக் குறைவானதாகும். போதிய நிதியில்லாததன் முக்கிய காரணத்தால் அவசியமான தரமிக்க பராமரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. கிரமமான பராமரிப்பு மேற்கொள்ளப்படாவிடின் பின்வரும் இரு பிரதான விளைவுகள் தோன்றலாம்:-

- நியம அடிப்படையிலான பேணல் கால அட்டவணைக்கேற்ப பராமரிப்பை மேற்கொள்ளாது பிற்பபோடுவதானது எதிர்காலத்தில் பராமரிப்புச் செலவில் அதிகரிப்பினை விளைவிப்பது மட்டுமன்றி கட்டமைப்பு அதிகளவில் மோசமடைவதனால் மேலதிக வேலை அல்லது மீளமைக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தி பாரிய மேலதிக செலவினை விளைவிக்கலாம்.

**சிறப்புக் குறிப்பு 08 (தொடர்ச்சி)**

- போதிய பராமரிப்பு இன்மையால் கட்டமைப்பின் பலம் நலிவடைந்து கட்டமைப்பு பாழாவதற்கான இடர் நேர்வை அதிகரித்து மனித உயிர்கள் பொதிக வளங்கள், மற்றும் சூழலியல் முறை நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் பாரிய அழிவுக்கு வழிவகுக்கலாம்.

பாகித்தானில் 2003 இல் அமைக்கப்பட்ட 25 மீற்றர் உயரமும் 147 மீற்றர் நீளமும் கொண்ட ஒப்பீட்டளவில் சிறிய அணையொன்று (ரந்தெனிகல அணையின் நாலிலொரு பங்கு) அண்மையில் வெடித்ததனால் 20 கிராமங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு சுமார் 30,000 பேர் வீடுகளை இழந்தனர். மேலும் 2004 திசெம்பரில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பூகோளவியலாளர் இலங்கையில் பூமி அதிர்ச்சி மற்றும் வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு தற்போது அதிக வாய்ப்புள்ளதாக தெரிவிக்கின்றனர். புதிதாக உருவாகியுள்ள உயர் அழுத்தத்தைக் கொண்ட புவித்தகட்டு எல்லைக்கு மிக அதிக தூரத்தில் இலங்கை இல்லாததால் இத்தகைய செயற்றிட்டங்களது நிர்மாணத்திலும் பராமரிப்பிலும் அதிக கவனம் தேவைப்படுகின்றது.

முழு பொருளாதாரத்திற்கும், சமூக வாழ்வு மற்றும் சூழலியல் முறைக்கு நீர்த்தேக்க செயற்றிட்டங்களது எண்ணுதற்கரிய பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு பல நாடுகள் தமது சட்ட வாக்கங்களின் ஒரு பகுதியாக நீர்த்தேக்க பாதுகாப்பு நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் வெளியிட்டுள்ளன. எனினும் இலங்கை இவ்விடயத்தில் பின்தங்கியுள்ளது. கிடைக்கத்தக்க நிதிகளை உரிய நேரத்தில் ஒதுக்காமை, கொள்வனவு நடைமுறைகளிலுள்ள பலயீனங்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருத்தல் என்பனவும் உரிய நேரத்தில் போதியளவு பராமரிப்பினை மேற்கொள்வதற்கு தடையாக விளங்குகின்றன. நீரேந்துப் பகுதிகளது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, வண்டல் படிவு, நீர் முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் என்பனவற்றுடன் தொடர்பான பிரச்சனைகள் நீர்த்தேக்க மட்டங்களில் காணப்படுவதுடன் இவை உரிய அதிகாரிகளின் உடனடிக் கவனத்தை வேண்டி நிற்கின்றன.

நியமங்களுக்கேற்ப தேவைப்படுகின்ற பராமரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்படாமைக்கு பிரதான காரணம் நிதிப்பற்றாக்குறையே ஆகும். அணைக்கட்டுகளின் கதவுகளும் பிற இணைந்த கட்டமைப்புக்களும் முக்கியமாக மின்சார மற்றும் இலத்திரனியல் முறைமைகள் ஊடாகவே கட்டுப்படுத்தப்படுகின்றன. நம்பிக்கையான தொழிற்பாட்டினையும் அணைக்கட்டின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்கு விழிப்பான மேற்பார்வை, உரிய காலத்திலான பராமரிப்பு மற்றும் இப்பொருட்களை பதிலீடு செய்தல் என்பன அவசியமாகும். கொள்வனவு நடைமுறைகளிலான குறைபாடுகளும் உரிய காலத்திலான பராமரிப்பை அவசியமற்ற வகையில் தாமதப்படுத்துகின்றன. தொழில்சார் நிபுணர்கள் மற்றும் சிறப்புத் திறன் கொண்ட ஊழியர்களை தொடர்ச்சியாக வைத்துக்கொள்வதிலும் நீர்த்தேக்கங்கள் முகாமை பிரச்சனைகளை எதிர்கொள்கின்றது. இதற்குப் பிரதான காரணம் குறைந்த வேதனம், கடினமான வேலை நிலைமைகள், போதிய பயிற்சி யின்மை, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும் பிற முக்கியமான வசதிகளும் இப்பகுதிகளில் போதியளவில் இல்லாதிருப்பது என்பன காணப்படுகின்றன.

மகாவலி அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு தேவையான பராமரிப்பை மேற்கொள்ள மாற்று நிதி மூலங்களை கண்டறிவதற்கான அவசியத்தை இது புலப்படுத்துகின்றது. 1969 இல் ஐ.நா.அபிவிருத்தி முகவரகம் சமர்ப்பித்த மகாவலி நீர்ப்பாசன மற்றும் நீர்மின் அளவீட்டு அறிக்கையில் முறையான பராமரிப்பும் இதற்கென போதிய நிதிகள் திரட்டப்படுவதும் அவசியமென அடையாளம் காணப்பட்டு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. *அரசாங்கத்தால் வழங்கல் செய்யப்படுகின்ற நீர்ப்பாசனத்திற்கு நீர்க்கொடுப்பனவு செய்யும் வழக்கம் இலங்கையில் இல்லை. எனவே அபிவிருத்தியின் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு குடியேறுபவர் ஒரு பெயரளவு கட்டணத்தை அரசுக்குச் செலுத்துமாறு கேட்கப்பட வேண்டும். அதன் பின்னர் பாசன நீரை வழங்குவதற்கான வருடாந்த பராமரிப்பு மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளை செலுத்துமாறு அவரை கோர வேண்டும். இக்கட்டணங்கள் பயன்படுத்திய நீரின் அளவுக்கேற்ப வசூலிக்கப்பட வேண்டும். நீர் விரயத்தை தடுக்கவும் பயிர் பன்முகப்படுத்தலை ஊக்குவிக்கவும் இது அவசியமாகும். (பக்கம் 99)* எனினும் இத்தகைய முறைமையொன்று இன்னமும் தாபிக்கப்படவில்லை. மறுபுறத்தில் இலங்கை மின்சார சபைக்கு மின்சார உற்பத்திக்காக வழங்கப்படும் நீருக்கு கட்டணமும் அறவிடப்படுவதில்லை. 2003 இல் மகாவலி மின் உற்பத்தி நிலையங்கள் ரூ.11 பில்லியன் பெறுமதியான 1,428 கிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருந்தன. மகாவலி மின் நிலையங்கள்

**சிறப்புக் குறிப்பு 08 (தொடர்ச்சி)**

இருந்திருக்காவிடின் சராசரி மின்சாரக் கட்டணமானது தற்போதைய மட்டத்தினைவிட (ரூ.7.70 அலகொன்றுக்கு) 25 சதவீதம் அதிகமாக (அலகொன்றுக்கு ரூ.1.93 இனால்) இருந்திருக்கலாம்.

நீர்த்தேக்கங்களின் முறையான பராமரிப்பை உறுதிப்படுத்துவதற்கு காலதாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நிலுவை யிலுள்ள சகல அவசர பராமரிப்பு வேலைகளும் இயன்ற விரைவில் உயர்ந்த பட்ச முன்னுரிமையுடன் மேற கொள்ளப்பட வேண்டும். சுயாதீனமான தகுதியுள்ள குழு ஒன்று நாட்டிலுள்ள சகல அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்றிட்டங்களின் நிலைத்திருக்கும் பராமரிப்பு தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து அணை உடைப்புக்கள் ஏற்படுவதற்கான இடரினை குறைப்பதற்கு அவசியமான ஆகக் குறைந்த நியமங்களை உருவாக்குதல் வேண்டும்.

மாற்று நிதி மூலங்களும் கண்டறியப்படல் வேண்டும். மின்சார பாவனையாளர்களால் செலுத்தத்தக்க நீர்த்தேக்க பராமரிப்புக்கான பங்களிப்புத் தொகையொன்று மின்சார உற்பத்திக்காக மகாவலி நீர்த்தேக்கங்களிலிருந்து வழங்கப்படும் நீரை அடிப்படையாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டு பராமரிப்பிற்கு நிதியிடும் மூலமாக பயன்படுத்தப் படலாம். இது அலகொன்றுக்கான மின்கட்டணத்தில் ரூ.0.05 என்றளவு அதிகரிப்பினை மட்டுமே ஏற்படுத்தி ஆண்டொன்றுக்கு ரூ.300 மில்லியனை திரட்ட உதவும். நீர்ப்பாசன உட்கட்டமைப்பை பராமரிப்பதற்கான செலவை பகுதியளவில் நிதியிடுவதற்கும் நீர் விரயத்தினை குறைப்பதற்குமாக பாவனையாளர் கட்டணமொன்றை பாசன நீர் தொடர்பில் அறிமுகப் படுத்துவதுவும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு மகாவலி நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கான உரிமம் வழங்குதல், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பனவும் வேறு வருமானமீட்டும் நடவடிக்கைகளாக கருத்திற் கொள்ளப்படலாம்.

தகைமைபெற்ற இடர்நேர்வு மதிப்பாய்வாளர்களைக் கொண்டு அனைத்து பாரிய நீர்த்தேக்க செயற்றிட்டங்களையும் ஒரு கால இடைவெளியில் "பொறியியல் ஆய்வு" ஒன்றிற்கு உட்படுத்த ஏதுவாக அணை பாதுகாப்பு நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும். நீர்த்தேக்கப் பகுதிகளில் இடர்நேர்வுடைய தொழில்களை செய்வோருக்கான காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குதல், பின்தங்கிய பிரதேசங்களில் பணிபுரியும் தொழில்சார் நிபுணர்களையும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களையும் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் வகையில் மேலதிக கொடுப்பனவுடனான ஊக்குவிப்புத் திட்டமொன்றை உருவாக்குவது பரிசீலனைக்கெடுக்கப் படல் வேண்டும். நீரேந்து பகுதிகளை பாதுகாக்க பயனுறுதிமிக்க விழிப்புணர்வு பிரச்சாரம், மீள்காடாக்கல் காடு வளர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற் கொள்வதும் அவசியமாகும்.

---

தற்பொழுது ஒருசில ஒழுங்குவிதிகளே இருப்பதுடன் மற்றைய வடிவங்களிலமைந்த நீர் மூலவளங்கள் அவற்றின் நீண்டகால வலுவான தன்மைக்கு அச்சுறுத்தலைக் கொண்டனவாகவேயுள்ளன.

2004 இல் மேம்பட்ட நீர்மூலத்தினைப் பெறுகின்ற குடியிருப்பாளர்களின் விகிதாசார 71 சதவீதமாக விளங்கியதுடன், இதில் ஏறத்தாழ 28 சதவீதத்தினர் மட்டுமே குழாய் மூலமான நீரைப் பெற்று வருகின்றனர். எனினும், இவ்வழங்கலானது அடிக்கடி தடங்கலுக்குற்படுகிறது. ஆகவே, நீர் வழங்கலை நிகழ்கால மற்றும் எதிர்கால தேவைகள் இரண்டினையும் பூர்த்தி செய்யும் விதத்தில் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. அண்மைய ஆண்டுகளில் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துறை மெதுவான வேகத்திலெனினும் தொடர்ந்தும் விரிவாக்கத்தினைக் காட்டிவருகிறது. நீர்வழங்கல் திட்டங்களின் அபிவிருத்தியிலும், நீர் விநியோகத்திலும் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலமாக அரசாங்கம் தொடர்ந்தும் முக்கிய பங்கினையாற்றுகிறது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, 2010 ஆம் ஆண்டளவில் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு நீர்வழங்கல் துறைக்கு ரூ.85 பில்லியன் கொண்ட முதலீடு தேவைப்படுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனினும், இந்நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகை ஏறத்தாழ ரூ.7 பில்லியன் மட்டுமேயாகும். இது, நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தில் புத்தாயிரமாம் ஆண்டு இலக்கினை எய்துவதற்கு மாற்று நிதியிடல் மூலவளங்களைக்கண்டு கொள்ள வேண்டியதன் தேவையை எடுத்துக் காட்டுகிறது.

நீர்கொழும்பு பெரும்பாகம் மற்றும் களுத்துறையிலிருந்து காலி வரையான பகுதிகளை உள்ளடக்கிய

இரு முன்னோடி செயற்றிட்டங்கள் தனியார் துறைப் பங்கேற்பிற்காக அடையாளங் காணப்பட்டிருக்கின்றன. நாளொன்றிற்கு 40 மில்லியன் கலன் நீரைச் சுத்திகரிக்கும் பொறியினை களனி ஆற்றின் வலது கரையில் அமைப்பது தொடர்பான வடிவமைப்பு, நிருமாணம் மற்றும் தொழிற்படுத்தல் என்பனவற்றிற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு தனியார்துறை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சில பிரதேசங்களின் நீர்மானி வாசிப்பு மற்றும் உடன் பட்டியல் தயாரிப்பு போன்ற பணிகளை ஏற்கனவே வெளி மூலங்களிலிருந்து பெற்றுள்ளது.

நகர குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் செலவு அலகொன்றிற்கு ஏறத்தாழ ரூ.24 ஆக இருக்குமிடத்து நீர் வழங்கல் சபை உள்ளூர் குடியிருப்பாளர்களுக்கு உயர்ந்த உதவுதொகை வீதத்தில், அதாவது மாதாந்த நுகர்வு மாதமொன்றிற்கு 20 அலகுகளாக இருக்கும்பொழுது அலகொன்றினை ரூ.5.88 இற்கு வழங்குகின்றது. மொத்த நீர் நுகர்வில் ஏறத்தாழ 70 சதவீதம் உள்நாட்டுத் துறையில் காணப்படுகின்றதெனினும், இது மொத்த வருமானத்தில் மூன்றிலொரு பங்கினை மட்டுமே வழங்குகின்றது. நீரின் உண்மையான பொருளாதாரச் செலவினைப் பிரதிபலிக்கின்ற நியாயமானதொரு தீர்வை முறை நீரின் விரயத்தினை குறைக்கும்.

2004 ஆம் ஆண்டுப்பகுதியில், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்ளூர், வெளிநாட்டு நிதிகள் இரண்டினையும் பயன்படுத்தி பல நீர் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இது, நீர்த்துறைக்கு ஒதுக்கப்பட்ட பெரும்பாலும் முழு மூலதன நிதியினையும் பயன்படுத்தி 2004 இல் நீர் வழங்கல் திட்டங்களில் ரூ.12,747 மில்லியன்களை முதலீடு செய்தது. இவ்வாண்டில், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 73 உள்ளூரில் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களையும் 14 வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களையும் கையாண்டது. 2004 இல் நடைமுறைப்படுத்தப்படட வெளிநாட்டு நிதியிடப்பட்ட முக்கிய நீர் வழங்கல் செயற்றிட்டங்களாக, இரண்டாவது நகர நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டம், களனிகங்கையின் வலது கரையிலுள்ள நீர் சுத்திகரிப்பு பொறிச் செயற்றிட்டம், மூன்றாவது நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டம் என்பன விளங்கின.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மொத்த வருமானம் 2004 இல் ரூ.4,910 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. அதிகரித்த வருமானம் முக்கியமாக பாவனையாளர் வலையமைப்பு விரிவடைந்தமையின் மூலம் பெறப்பட்டதாகும். நீர் தீர்வை வீதங்களில் அவசர திருத்தங்கள் செய்ய வேண்டியதன் தேவையினை எடுத்துக்காட்டும் விதத்தில், 2003 இன் ரூ.279 மில்லியன் கொண்ட தேறிய தொழிற்பாட்டு இலாபத்திற்கு மாறாக 2004 இல் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தேறிய தொழிற்பாட்டு இழப்பு ரூ.383 மில்லியன்களாக காணப்பட்டது. எனினும், சொத்துக்களின் பெறுமானத் தேய்வினைக் கணக்கில் கொள்கையில், தேசிய நீர் வழங்கல் வடிகால்சபையின் தேறிய நிதிப் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்க இழப்புக்களை பதிவு செய்து, அதன் மூலதனத் தளத்தினை வீழ்ச்சியுறச் செய்து அதன் நிதியிடலை மீளநிரப்புவதற்கு வரி செலுத்துவோர் பெருமளவு நிதியினை வழங்க வேண்டிய தேவையினையும் ஏற்படுத்தும்.

2004 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன திணைக்களம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்களின் உதவியுடன் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டது. அம்பாந்தோட்டை நீர்ப்பாசன மற்றும் புத்தாக்க செயற்றிட்டம் மற்றும் வெலிஓயா நீர்ப்பாசன செயற்றிட்டம் ஆகிய இரண்டும் வெளிநாட்டு நிதியிடலுடன் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட இரு முக்கிய செயற்றிட்டங்களாகும். மேலும், திணைக்களம் உள்நாட்டு நிதியிடலுடன் 26 செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. 2004 இல் உள்நாட்டு நிதியிடலுடனான செயற்றிட்டங்களினதும், வெளிநாட்டு நிதியிடலுடனான செயற்றிட்டங்களினதும் மொத்தச் செலவினம் முறையே ரூ.225 மில்லியன்களாகவும் ரூ.357 மில்லியன்களாகவும் விளங்கின. சுதந்திரத்திற்குப் பின்னர் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் நீர்த்தேக்கங்களை நிருமாணிப்பதிலும், முக்கிய நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திகளிலும் பெருமளவு நிதியினை முதலீடு செய்திருந்தன. எனினும், இச்சொத்துக்கள் சரியான முறையில் பேணப்படவில்லை. சரியான பேணல் காணப்படாமையானது, எதிர்காலத்தில் பேணல் செலவுகளின் மீது கணிசமான அதிகரிப்பினை ஏற்படுத்துவது மட்டுமன்றி, குறைப் பயன்பாட்டிற்கும் தற்பொழுது அமைப்பியல் தவறுகளுக்கு காரணமாகக் கூடிய இடர்நேர்வுகளுக்கும் வழிவகுக்கக்கூடும்.

நீர்ப்பாசனத் திணைக்களம் 'வப் கவுல' நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பாரிய மற்றும் நடுத்தர அளவு நீர்ப்பாசன திட்டங்களை உள்ளடக்கிய பங்கேற்பு நீர்ப்பாசன முகாமைத்துவ செயற்றிட்டத்தினை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. அரசாங்கத்தின் 1,000 சிறு நீர்ப்பாசனக் குளங்களை புதுப்பிக்கின்ற செயற்றிட்டத்தின் கீழ் 2004 இல் திணைக்களம் பெரும் எண்ணிக்கையான நீர்ப்பாசனக் குளங்களையும் புதுப்பித்திருக்கின்றது.

### 3.3 சமூக உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவன ரீதியான அமைப்பு மற்றும் செயலாற்றம்

உலக வங்கி அண்மையில் குறிப்பிட்டவாறு இலங்கை, பல்வேறு பரிமாணங்களில் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை குறிப்பாக நாடு முழுவதிலுமுள்ள வயது வந்த பிள்ளைகள் ஆரம்பக் கல்வியில் சேர்ந்துள்ளமை பால் வேறுபாடின்மை, அதேபோன்று சிறுவர் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரின் மரண வீதம் குறைவடைந்துள்ளமை என்பனவற்றில் எய்தியிருக்கிறது. இலங்கையின் முக்கிய சமூகக் குறிகாட்டிகள் ஒப்பிடத்தக்க மற்றைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள குறிகாட்டிகளைவிட உயர்வாகவும் பல அபிவிருத்தியடைந்த நாடுகளின் குறிகாட்டிகளுக்குச் சமமாகவும் காணப்படுகின்றன. எனினும், பன்னாட்டு ரீதியாக போட்டியிடக் கூடிய பணிக்கட்டமைப்பு, உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை தூண்டக்கூடிய இயலாற்றம் மற்றும் குறிப்பாக உயர்தரக் கல்வி மற்றும் நலத்துறையில் குடித்தொகையின் வளர்ந்துவரும் கேள்வியை திருப்திப்படுத்தல் என்பனவற்றில் சமூக உட்கட்டமைப்பு இன்னமும் வளர்ச்சியடையவில்லை. இது, அனைத்து குறிகாட்டிகளும் தரம் மற்றும் அளவு ஆகிய இரண்டிலும் படிப்படியாக மோசமான தன்மையினைச் சுட்டிக்காட்டுவதனால் தற்போதைய சாதனைகளை பேணிக் கொள்வதிலும் சவால்களை எதிர்நோக்குகின்றது.

#### நலம்

2004 இல் நலத்துறை பல முக்கிய பின்னடைவுகளினால் பாதிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, அரச துறை நலப்பணிகளில் அடிக்கடி காணப்பட்ட தொழிலாளர் பிணக்குகள் பணிகளை முடக்கியதுடன் பொதுமக்களையும் வசதியீனங்களுக்குள்ளாக்கின. டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு இரத்தப்போக்கு காய்ச்சல் என்பன 13,000 இற்கும் கூடுதலான மக்களுக்கு தொற்றியதுடன் 73 ஆட்களின் மரணத்திற்கும் காரணமாயிற்று. இது, இலக்கிடல் எதுவுமின்றி சகலருக்குமான அரச நலக்கவனிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் பாரிய பொது நிதியிடலைப் பேணுவதில் தொடர்ந்தும் இடர்ப்பாடுகள் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது. அரச துறையின் நலப் பணிகளின் சில அம்சங்களில் காணப்பட்ட மோசமான தன்மைகள், குறிப்பாக நலக்கவனிப்பிலான தனியார் துறையின் அதிகரித்த முதலீடுகளின் மூலம் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், பெரும்பாலும் ஒரு பொதுப்பொருள் தன்மையினைக் கொண்ட நோய்த்தடுப்புக் கவனிப்பு, நிதியிடலின் போதுமானதற்ற தன்மையினாலும் அரசதுறைக்கே உரித்தான வினைத்திறனின்மைகளினாலும் பாதிப்படைந்து இலங்கையின் வரலாற்று ரீதியான சாதனைகளை பலயீனமடையச் செய்கிறது. ஆகவே சரியான இலக்கிடல், நோய்த்தடுப்பு கவனிப்பிற்கான நிதியைச் சேமிக்க இயலச் செய்வதுடன் இதன் மூலம் இலங்கையின் நலச் செயலாற்றமும் உயர்த்தப்படும். நோய்த்தடுப்புக் கவனிப்பினை மேம்படுத்துவதில் தனியார்துறை முதலீட்டாளர்கள் மிகக் குறைந்த ஊக்குவிப்பினையே கொண்டுள்ளமையினால், இது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.

நலத்துறை சீர்திருத்தங்களின் கீழ், 1997 இல் நலத்துறையின் மீதான சனாதிபதி செயலணிக் குழுவினால் செய்யப்பட்ட முக்கிய விதந்துரைப்புக்கள் ஐந்து துறைகளில் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இவையாவன, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வைத்தியசாலையாவது மேம்படுத்துதல், சிறப்புத் தேவைகளைக் கொண்ட பிரதேசங்களுக்கு பணிகளை விரிவாக்குதல், நல மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், மாற்று நிதியிடல் பொறிமுறை உட்பட நிறுவன அமைப்பினை சீர்திருத்துதல் மற்றும் தனியார் துறையுடன் மூலவளங்களைப் பகிர்ந்து கொள்வதனை ஊக்குவித்தல் என்பனவாகும். இவற்றுடன் இணைந்து செல்லும் விதத்தில் நலத்துறை அமைச்சு பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியின் ஒத்துழைப்புடன் 2003 ஒத்தோபரில் தேசிய நல அபிவிருத்தி முதன்மைத் திட்டமொன்றினை உருவாக்கியது.

அட்டவணை 3.8
**நலத்துறைப் பணிகள்**

| விடயம் | 2002 | 2003 | 2004(அ) |
|---|---|---|---|
| *அரச* | | | |
| மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருத்துவத்தைக் கையாள்பவை எண்ணிக்கை) | 605 | 606 | 598 |
| படுக்கைகள் எண்ணிக்கை | 59,781 | 61,808 | 60,328 |
| மத்திய மருந்தகங்கள் எண்ணிக்கை | 385 | 387 | 375 |
| மருத்துவர்களின் எண்ணிக்கை | 7,459 | 8,342 | 8,749 |
| துணை மருத்துவர்களின் எண்ணிக்கை | 1,295 | 1,289 | 1,276 |
| ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை | 16,455 | 16,799 | 17,038 |
| தாதிமார்களின் எண்ணிக்கை | 16,139 | 16,711 | 17,316 |
| உடன் கவனிப்பாளர் எண்ணிக்கை | 6,955 | 6,880 | 6,696 |
| **தனியார்** | | | |
| மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருத்துவத்தைக் கையாள்பவை எண்ணிக்கை) | வி.கி | 172 | 174 |
| படுக்கைகள் எண்ணிக்கை | வி.கி | 8,500 | 8,650 |
| மொத்த நலத்துறைச் செலவு (ரூ.பில்.) | 24.9 | 27.5 | 34.4 |
| நடைமுறைச் செலவு (ரூ.பில்.) | 20.2 | 22.1 | 25.9 |
| மூலதனச் செலவு (ரூ.பில்.) | 4.7 | 5.4 | 8.5 |

மூலம்: நலத்துறை கவனிப்பு, ஊட்டச்சத்து, ஊவா வெலஸ்ச அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆகக் குறைந்தது ஒரு வைத்தியசாலையையாவது அபிவிருத்தி செய்கின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வெளிமாவட்டங்களிலுள்ள 34 வைத்தியசாலைகள் கட்டம்கட்டமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. மனநலப் பணிகளை பன்முகப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு மனநல காப்பகமொன்றினை உருவாக்குதவற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பெருந்தோட்டத்துறை முகாமைத்துவத்தின் கீழ் உள்ள 50 வைத்தியசாலைகள் அரசாங்கத்தினால் மேலும் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் 22 வைத்தியசாலைகள் ஏற்கனவே அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

வர்த்தகப்படுத்தத்தக்க பணியொன்றாக இலங்கையின் நலத்துறைப் பணிகள் தனியார் துறையின் அதிகரித்த முதலீடுகளினூடாக படிப்படியாகப் போட்டித் தன்மையினை அடைந்து வருகின்றன. தனியார் வைத்திய சாலைகளில் அண்மையில் ஏற்பட்ட எழுச்சி, உயர்தர நலக் கவனிப் பிற்கான கேள்வியை அரச துறை வழங்கத்தவறும் போது அத்தகைய நலக் கவனிப்புக்களுக்கான கேள்வியை ஈடுசெய்யப்பட வேண்டியதன் தேவையினை எடுத்துக் காட்டு வதாகவுள்ளது. இது, அவசியமான உட்கட்ட மைப்புக்களை வழங்குவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை கவருகின்ற இலங்கையின் முயற்சிகளுடனும் நலத்துறைச் சுற்றுலாவினை அபிவிருத்தி செய்தல் போன்ற சிறப்புத் துறைகளுடனும் சிறப்பாகத் தொடர்புடையனவாகும். நலக்கவனிப்பினை வழங்குவதிலான ஏற்பாடுகளில் தனியார் துறையின் அதிகரித்த பங்கேற்புக் காரணமாக தரமும் நியமங்களும் பேணப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப் பொன்றினை அபிவிருத்தி செய்தல் இன்றியமை யாததாகும்.

நலக் கவனிப்புப் பணிகளின் வழங்கலில் தனியார்துறை நுழைந்துள்ளமையானது முழு முறைமையும் பொதுவாக சீர்குலைந்து போவதனைத் தடுப்பதற்கு நாட்டிற்கு உதவியிருக்கிறது என்பது மிகத் தெளிவானதாகும். இது தனியார் துறையினால் பயன்படுத்திக் கொள்ளப்படுவதற்காக அரச துறை நலப் பணிகளில் காணப்பட்ட பாரிய அளவிலான ஆளணியினரை விடுவித்ததன் மூலம் ஓரளவிற்கு வசதியளிக்கப்பட்டது. இதன்படி, அரசதுறை நலக் கவனிப்பு முறையில் தொழிலாற்றும் வைத்திய நிபுணர்களின் பணிகள் தனியார் துறைக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. இதேபோன்று, அலுவல்சார் ரீதியில் ஒப்புதலளிக்கப்படாத போதும் தொழில் நுட்பவியலாளர்களின் பணிகளும்கூட தனியார்துறை நிறுவனங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கையினை நலக்கவனிப்பு முறையின் உள்ளீடுகளின் தனியார் மயமாக்கல் என விபரிக்க முடியும் என்பதுடன் இது இதனுடன் தொடர்பான நலவுரித்துக் கொண்ட அனைவருக்கும் நன்மை யளித்திருக்கிறது. கடுமையான நியமங்களை விதிக்கின்ற அரசாங்க கட்டமைப்பொன்றின் கீழ், தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பதன் மூலம் மேலுமொரு முன்னோக்கிய நடவடிக்கையினை மேற்கொள்வது இப்பொழுது அவசியமானதாகும். அத்தகைய தனியார் மருத்துவக் கல்லூரிகள், மூலவளக் கட்டுப்பாடுகளின் காரணமாக தற்பொழுது அரசத்துறை யினால் பூர்த்திசெய்ய முடியாமல் இருக்கும் உயிரியல் துறையில் கல்வியினை பயிலும் மாணவர்களின் மருத்துவக் கல்வியை தொடர்வதற்கான அவர்களது குறிக்கோளை அடைவதற்கு உதவும், உள்ளீட்டுச் சந்தைகளை மேலும் தாராளமயமாக்கும், மற்றும் அரசதுறை மருத்துவக் கல்லூரிகள் தரத்தினை உயர்த்தி, சிறப்பு நிலையடைவதற்கு ஏற்ற காத்திரமான போட்டித்தன்மையினை வழங்குவதுடன் அடித்தள அளவீட்டு குறியினை உருவாக்குவனவாகவும் விளங்கும். கட்டிடங்கள், கருவிகள், ஊர்திகள், மருந்துகள் போன்ற நலக்கவனிப்பு பணிகளின் மற்றைய அனைத்து உள்ளீடுகளும் தனியார் துறையினால் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுவதனால் பணிகளின் தரம் விட்டுக்கொடுக்கப்படுமென்று பெருமளவிற்கு விபரிக்கப்படுகின்ற அச்சம் அடிப்படையற்றதாகும்.

## கல்வி

விரைவான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தொடர்ச்சியாக முன்னேற்றமடையும் கல்வி முறைமை ஒரு முற்தேவைப்பாடாகும். கல்வி முறைமையானது பொதுக்கல்வி, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் இறுதியாக உயர் கல்வி என எல்லா முக்கிய பிரிவுகளையும் உள்ளடக்கும். கடந்த தசாப்தத்தில், பொதுக் கல்வியில் தனியார் துறையின் ஈடுபாடு மிகப் பெரியளவில் விரிவடைந்து இலங்கையில் பொதுத்துறை யினால் வழிப்படுத்தப்படும் கல்வி முறைமையிலிருந்த இடைவெளிகளை நிரப்பியது.

1998 இல் பொதுக்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், பணி வழங்கலை வலுப்படுத்துதல், சகல மட்டங்களிலுமுள்ள கல்வி நிறுவனங்களது பொருளாதார மற்றும் சமூக தேவைப்பாட்டை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை, பல்கலைக்கழக மற்றும் தொழிற்கல்வி சீர்திருத்தங்கள், அரச உடமையின்

கீழ் மூன்றாம் நிலைக்கல்வியை விரிவுபடுத்தி வாய்ப்புக்களை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

தற்போதைய பொதுக்கல்வி கொள்கைகள் பிராந்திய வேறுபாடு குறைப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளன. இது தொடர்பில், 'நவோதய பாடசாலை திட்டம்' போன்றவற்றை உள்ளடக்கிய கிராமிய மற்றும் நகரம் சார்ந்த பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இப்பகுதிகளில் ஆசிரியர்களது எண்ணிக்கையை அதிகரிக்கவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக் கல்வியின் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்த முறைக்குள்ளான மேலோட்டமான முன்னேற்றங்களாக தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அணுகுமுறைகள், பாடவிதானத்தில் தகவல் தொழில்நுட்ப கல்வியினை உள்ளடக்கல், மாணவர்களுக்கு உளவளத்துணை பணிகள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல் ஆங்கிலக் கல்வியினை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறெனினும் இவ்நடவடிக்கைகள் நாட்டின் கல்வி முறைமை மாறிவரும் பூகோள நடைமுறைகளுக்கு ஒத்திசைவாக அமையும் வகையில் தேவைப்படும் கல்வி மறுசீரமைப்புக் களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்தனவாகும்.

தகுதி வாய்ந்த திறமையான ஆசிரியர்களது பற்றாக்குறையானது பொதுப் பாடசாலை முறைமையைப் பொறுத்து மிகவும் பாரதூரமான பிரச்சனையாக விளங்கி வந்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆசிரியர்களாக பணிபுரிய பட்டதாரிகள் பட்டப்பின் படிப்பு பயிற்சி நெறிகளை பின்பற்ற வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இத்தகைய பயிற்சி நெறிகள் ஆசிரியத் தொழிலை தமது வாழ்க்கைத் தொழிலாக விரும்பி ஏற்கும் பட்டதாரிகள் தமது புத்தாக்கமான கற்பித்தல் முறைகள், கல்வி உளவியல் மற்றும் தமது சொந்த தொழில் மேம்பாட்டுக்கான சுய கற்றலுக்கான ஊக்கமளித்தல் என்பவற்றுக்கு உதவி புரிகின்றன. எனவே பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்கள் ஆசிரியத் தொழிலை தமது வாழ்க்கைத் தொழிலாக விரும்பி ஏற்போராலேயே நிரப்பப்பட வேண்டுமே யன்றி வேறு மாற்று வேலைவாய்ப்புக்கள் கிடைக்காததால் ஆசிரியர் தொழிலை தெரிவு செய்வோரால் அல்ல. மேலும் வேலைக்கமர்த்தப் பட்டோருக்கும் கற்பித்தல், முறைகள், கல்வி உளவியல் என்பவற்றில் விரிவாக பயிற்றுவிக்கப்பட்டு திறமையான ஆசிரியர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

பொதுக்கல்வி துறையானது சுனாமியின் காரணமாக திசெம்பர் மாதத்தில் பாரதூரமான பாதிப்புக்குள்ளானது. பதினொரு மாவட்டங்களிலுள்ள 68 பாடசாலைகள் முற்றாக் சேதமடைந்த அதேவேளை 105 பாடசாலைகள் பகுதியளவில் சேதமடைந்தன. பல பாடசாலைகள் தற்காலிக அகதிமுகாம்களாக மாற்றப்பட்டன. இப்பாடசாலைகளை மீளமைக்க ரூ.1,131 மில்லியன் செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

முற்றிலும் அரச துறையின் தனியுரிமையாக இருக்கும் இலங்கையின் பல்கலைக்கழக கல்வியானது கேள்வியைச் சமாளிக்க முடியாதுள்ள அதேவேளை உலகளாவிய போக்குகளுக்கிசைவாக பல துறைகளில் தரமான கல்வியை வழங்க இயலாமல் தோல்வியடைந்துள்ளது. இத்தோல்வியானது பெருமளவான மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியைத் தெரிவு செய்யாது தொழிற்கல்வி பயிற்சியைத்

அட்டவணை 3.9

**பொது மற்றும் பல்கலைக் கழகக் கல்வி**

| விடயம் | 2002 | 2003 | 2004(அ) |
|---|---|---|---|
| **பொதுக் கல்வி** | | | |
| 1. மொத்தப் பள்ளிக்கூடங்கள் | 10,508 | 10,473 | 10,458 |
| அரச பள்ளிக்கூடங்கள்(ஆ) | 9,829 | 9,790 | 9,766 |
| இதில் தேசிய பள்ளிக்கூடங்கள் | 323 | 323 | 324 |
| ஏனைய பள்ளிக்கூடங்கள் | 679 | 683 | 692 |
| தனியார் | 80 | 85 | 85 |
| பிரிவேனா | 599 | 598 | 607 |
| 2. மாணவர்கள் ('000) | 4,179 | 4,098 | 4,031 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர்('000) | 325 | 316 | 302 |
| 4. ஆசிரியர்கள் எண்ணிக்கை ('000) | 196 | 197 | 196 |
| 5. மாணவர்கள்/ஆசிரியர்கள் விகிதம் (அரச பள்ளிக்கூடம்) | 22 | 21 | 21 |
| 6. கல்விக்கான மொத்தச் செலவினம் (ரூபா பில்லியன்) (இ) | 37 | 39 | 42 |
| நடைமுறை | 31 | 32 | 33 |
| மூலதன | 6 | 7 | 9 |
| **பல்கலைக்கழகக் கல்வி** | | | |
| 1. பல்கலைக் கழகங்கள் | 13 | 13 | 13 |
| 2. மாணவர்கள் (ஈ) | 48,666 | 64,291 | 64,801 |
| 3. விரிவுரையாளர்கள் (உ) | 3,390 | 3,543 | 3,611 |
| 4. பட்டதாரிகள் எண்ணிக்கை | 9,027 | 10,730 | வி.கி |
| கலைகளும் கீழைத்தேச கற்கைகளும் | 3,288 | 3,456 | வி.கி |
| வர்த்தக, முகாமைத்துவக் கற்கைகள் | 2,018 | 2,121 | வி.கி |
| சட்டம் | 170 | 307 | வி.கி |
| பொறியியல் | 1,060 | 652 | வி.கி |
| மருத்துவம் | 754 | 1,274 | வி.கி |
| விஞ்ஞானம் | 1,159 | 1,876 | வி.கி |
| ஏனையவை | 578 | 1,044 | வி.கி |
| 5. அடிப்படைப் பட்டப் படிப்புகளுக்கு புதிதாக அனுமதிப்பு | 12,144 | 25,471(ஊ) | 13,396 |

மூலங்கள்: கல்வி அமைச்சு
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு.
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இயங்காமல் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த.
(இ) உயர் கல்விக்கான அரச செலவினத்தையும் உள்ளடக்கும்.
(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த அனைத்து பல்கலைக் கழகங்களும்.
(உ) ஆண்டின் தொடக்கத்தில்
(ஊ) 2001 ஒகத்திலும் (12431) 2002 ஏப்பிறலிலும் (13040) நடத்தப்பட்ட பரீட்சைள் இரண்டிலும் தகைமை பெற்ற மாணவர்கள் 2003 இல் அனுமதிக்கப்பட்டனர்.

தெரிவுசெய்தல், குறைந்த வயதிலேயே பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தொழில் படையினுள் நுழைதல், கல்விக்காக பெருமளவானோர் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தல், உள்ளூர் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக பல வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் இலங்கையில் நிறுவப்பட்டு கல்வி வழங்கல் செயற்பாடுகளை மேற் கொள்ளுதல், ஆகிய பல்வேறு குறிகாட்டிகளினால் வெளிப்படுத்தப்படுகிறது. தன்னலமிக்க பகுதியினரால் இலங்கையில் மேற்கொள்ளபபடும் கடுமையான ஆர்ப்பாட்டங்களால் உயர் கல்வித்துறையை திறந்து விடுகின்ற மிக அவசியமான தீர்மானமெடுப்பதனை அரசாங்கம் காலந்தாழ்த்தி வருகின்றது. இது இறக்குமதிகளுக்கு சார்பாக உள்நாட்டு உற்பத்திகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு ஒத்ததாகும். எனினும் சுதந்திரமடைந்த காலத்திலிருந்த உயர்ந்த கல்வித் தரம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து பல மாணவர்கள் இங்கு வந்து இலங்கை பல்கலைக் கழகங்களில் கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழக கல்வியில் தனியார் துறையின் நுழைவு குறைந்த வருமானம் பெறும் கிராமப்புற மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பினை நிராகரிக்கும் பிற்போக்குத்தனமான நடவடிக்கை என்ற அடிப்படையிலேயே எதிர்க்கப்படுகிறது. இதன்படி அரசதுறையின் உயர்கல்வி வழங்கல் இத்தகைய மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் தொடரப்பட வேண்டுமென வாதிடப்படுகிறது. எனினும் இத்தகைய வாதமானது, கிராமப் புறங்களிலுமுள்ள இதே மாணவர் களுக்கு அரச பல்கலைக்கழக முறைமையின் வழங்கல் போதாமை காரணமாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய கல்வி வாய்ப்பை மறுப்பதாக அமையும் அதேநேரம் வசதியுள்ளவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாட்டு பல்கலைக்கழங்களுக்கு அனுப்புவதற்கும் வகைசெய்கிறது. தனியார் பல்கலைக்கழகங்கள் அனுமதிக்கப்பட்டால் அரச பல்கலைக்கழக முறை மையிலுள்ள இடங்களுக்கான கேள்வியின் ஒரு பகுதி தனியார் பல்கலைக்கழகங்களுக்கு மாறிச் செல்வதனால் குறைந்த வருமானங் கொண்ட தொகுதியிலுள்ள மாணவர்கள் அரசப் பல்கலைக்கழகங்களில் அதிக வாய்ப்புக்களைப் பெறமுடியும். மேலும், தனியார் மற்றும் அரச பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டித் தரத்தையும் சிறப்புத்துவத்தினையும் மேம்படுத்தி சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் அனுகூலம் தரும்வகையில் சிறப்பான பல்கலைக்கழக கல்விக்கு இட்டுச்செல்லும்.

எனினும், பல்கலைக்கழக கல்வி மீதான ஒழுங்கு விதிகளைத் தளர்த்துவதானது மாற்றமடையும் உலகளாவிய போக்குகளுக்கு இணைந்ததாக தேவைப்படும் நியமங்களை பேணுவதற்கான உத்தியோக பூர்வமான அங்கீகாரம் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் காலந்திர மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்கிய விரிவான திட்டத்தினையும் கொண்டிருத்தல் அவசியமாகும். இங்கிலாந்து, அவுத்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள பல பல்கலைக்கழகங்கள் இலங்கை உள்ளிட்ட வளர்ந்துவரும் நடுத்தர வருமானம்பெறும் நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் நிறுவனங்களைக் கொண்டுள்ளன. மேலும் மேம்பட்ட தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றின் பாவனையூடான தொலைக்கல்வி உலகளாவிய ரீதியில் முக்கியம் பெற்று வருகிறது. எனவே நாட்டின் உயர்கல்வி வாய்ப்புக்களில் காணப்படும் மோசமான குறைபாடுகள் காரணமாக உயர் கல்விக்கான மாற்றுவழிகள் கண்டறியப்படல் வேண்டும்.

பன்னாட்டு ஆய்வுகள், ஆரம்ப, இரண்டாந் தர, கல்வியின் சமூக விளைவு வீதமானது தனியார் விளைவு வீதத்தைக் காட்டிலும் மிக அதிகமானதென குறிப்பிடுகின்றன. இது அரசு தொடர்ந்தும் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்வியில் முதலீட்டை மேற்கொள்வதனை நியாயப்படுத்துகின்றது. எனினும் தனியார் விளைவு வீதமானது மூன்றாம் நிலைக்கல்வியில் அதிகமாக காணப்படுவதானது தனிப்பட்டோர் மூன்றாம் நிலைக் கல்வியில் முதலிட ஆர்வமாக இருப்பதனைப் புலப்படுத்துகின்றது.

தகவல் தொழில்நுட்பம், ஏனைய தொழில்சார் கல்வியை புகட்டும் ஏனைய பல தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் காணப்படுகின்றன. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இலங்கைக்கிளை, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம், இலங்கை வங்கியாளர் நிலையம் என்பன இவற்றுள் சிலவாகும்.

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களமானது 36 தொழில்நுட்ப கல்லூரிகளை முகாமித்து வருகின்றது. இவை இளைஞர்களுக்காக பல்வேறு தொழிற்பயிற்சி நெறிகளை வழங்குகின்றன. பல்வேறுபட்ட தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற் பயிற்சி பாடநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2004இல் 54,000 ஆகக் காணப்பட்டது. இது இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது தொழிலற்ற இளைஞர்களுக்கு பகுதியளவு தேர்ச்சி, பயிற்சிகளை வழங்கியவேளையில், தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளித்தல் அதிகார சபையானது தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றது. இலங்கை தேசிய தொழில் கல்வி நிறுவனமானது ஆசிரியர்களுக்கு பல்வேறு பயிற்சி

நெறிகளை நடாத்தி வருகின்றது. இந்நிறுவனமானது பாடவிதான அபிவிருத்தி, கற்பித்த லுக்கான உபகரணங்களினதும் பொருட்களினதும் அபிவிருத்தி என்பவற்றிலும் ஈடுபடுவதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் நடாத்தி வருகின்றது.

தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சியைப் பொறுத்தவரையில், போதனாசிரியர்களுக்கும் தொழில்நுட்ப பணியாளர்களுக்குமான பற்றாக்குறை, பயிற்சி நிலையங்களுக்கு உபகரணங்களை வழங்க போதிய நிதி வசதியின்மை என்பன பாரதூரமான பிரச்சனைகளாக உருவாகியுள்ளன. தரத்தினை மேம்படுத்தி ஆசிரியர்களது தகைமையை உயர்த்துதல், பாடவிதான அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் தற்போதுள்ள உட்கட்டமைப்பை தரமுயர்த்தல் என்பனவற்றினூடாக தொழில் பயிற்சியின் தரத்தினையும், பொருத்தப் பாட்டையும் மேம்படுத்துவதே இத்துறையிலான முக்கிய சவால்களாக காணப்படுகிறது.

## வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

அதிகரித்துவரும் சனத்தொகை வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தியினால் வீடுகளுக்கும் உட்கட்டமைப்பிற்குமான கேள்வியும் அதிகரித்து வருகின்றன. புதிய வீடுகளுக்கான வருடாந்தக் கேள்வி இலங்கையில் 80,000 அலகுகள் என்ற வீதத்தில் முதல் 100,000 அதிகரித்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை பெரும் எண்ணிக்கையான குறைந்த தரமுடைய வீடுகளை மேம்படுத்த வேண்டிய தேவையுமுள்ளது.

வீடமைப்பில் அரசாங்கத்தின் பங்கு கணிசமானதாக இருப்பினும் தற்போது அதன் பங்கு நேரடி வழங்குநர் என்பதிலிருந்து அனுசரணையாளர் என்ற நிலைக்கு மாறிவருகின்றது. அதிகரித்துவரும் வருமான மட்டங்களுடன் தனியார் துறையானது நடுத்தர, உயர் வருமான மட்டத்தினருக்கான வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதில் வலுவான சக்தியாக விளங்கி வருகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மீன்பிடி மற்றும் கடல்வள அமைச்சு, பெருந்தோட்ட மனிதவள நிதியம் என்பன அரசதுறை வீடமைப்பினை வழங்குவதில் பிரதான பங்கை வகிக்கின்றன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது மாதிரி கிராம வீடமைப்புத் திட்டம், பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டம் மற்றும் நேரடி கட்டுமானத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. செவன பியச நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, வறிய குடும்பத்தினர்களுக்கு நிரந்தர கூரைப் பொருட்களை வழங்கி வருகின்றது. மிகவும் வறிய தொகுதியினர் கூரை அமைப்பிற்கான செலவினை ஈடுசெய்வதற்காக ரூ.10,000 நிதி உதவியையும் மேலதிகமாக பெறுவர். 2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக 2,133 குடும்பத்தினர் நன்மையடைந்தனர். எனினும் 2004 இல் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டங்கள் குறைந்தளவு வளர்ச்சியை எடுத்துக்காட்டியமைக்கு நிதி பற்றாக்குறையே காரணமாகும். மீன்பிடி மற்றும் கடல்வள அமைச்சானது 2004 இல் மீனவருக்கென 714 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது பெருந்தோட்டத் துறையில் பல்வேறு வீடமைப்பு மற்றும் மேம்படுத்தல் திட்டங்களை பெருந்தோட்ட அபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டில் செயற்படுத்தியது. நகர அபிவிருத்தி மற்றும் குடிநீர் வழங்கல் அமைச்சின் நிலைத்திருக்கும் நகரமாக்கல் நிகழச்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் பிரிவான ரியல் எஸ்ரேற் எக்ஸ்சேஞ் (தனி) லிமிடெட்டானது கொழும்பு நகரிலுள்ள வறியோருக்கு உறைவிடம் வழங்கும் பணியை ஆற்றி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டில் 3,000 வீடுகளின் நிர்மாணத்தினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வீடமைப்புக்கான நிதிகளையும் கொடுகடன் வசதிகளையும் திரட்டுவதற்கான பொருத்தமானதொரு சூழலை உருவாக்கி, பூர்த்தி செய்யப்படாதுள்ள கேள்வியை பூர்த்தி செய்து எதிர்கால கேள்வியை ஈடுசெய்வதற்காக தனிப்பட்டவர்களது வீடமைப்பு நிர்மாணத்தை மேம்படுத்துவதே வீடமைப்பு தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கின்றது. 50,000 வீடுகளை அமைப்பதற்கான பெருந்தோட்டத்துறை வீடமைப்புத் திட்டமொன்றை 3 ஆண்டுப் பகுதியில் நிறைவு செய்வதற்காக ஆரம்ப மூலதனத்தை வழங்குவதற்கு பிரேரணையொன்று முன்மொழியப்பட்டுள்ளது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோருக்காக 300,000 வீடுகளை அமைக்கும் இலக்கு ஒன்றையும் அரசாங்கம் கொண்டுள்ளது. வர்த்தக வங்கிகளூடாக அரசாங்க ஊழியர்களுக்கு 4 சதவீதமென்ற சலுகை வட்டி வீதத்தில் ரூ.1 மில்லியன் வரையான வீடமைப்பு கடன்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற ஆதன அபிவிருத்தி கம்பனிகளுக்கு காணிகளை நியாயமான விலைகளில் வீடுகளை அமைக்கவென வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 2005 வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டில் தொழில்புரிந்த பின் நாடு திரும்பும் இலங்கையருக்கு வீடுகளை அமைப்பதற்கான திட்டமொன்றும் பிரேரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.10
**சமுர்த்தி நலன்புரி நிகழ்ச்சித் திட்டம்**
**நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும் 2002-2004**

| பணக்கொடை தொகை(ரூபா) | 2002 | | 2003 | | 2004 (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை(ஆ) | பெறுமதி (ரூ.மில்.) | குடும்பங்களின் எண்ணிக்கை(ஆ) | பெறுமதி (ரூ.மில்.) | குடும்பங்களின் எண்ணிக்கை (ஆ) | பெறுமதி (ரூ.மில்.) |
| *சமுர்த்தி வருமான குறை நிரப்பு நிகழ்ச்சித் திட்டம்* | | | | | | |
| ரூ. 1,000 | 3,954 | 67 | 3,801 | 47 | 3,616 | 44 |
| ரூ. 700 (2002 நவெம்பரிலிருந்து ரூ.600) | 589,460 | 5,663 | 586,318 | 4,233 | 584,635 | 4211 |
| ரூ. 400 | 335,727 | 1,860 | 336,203 | 1,613 | 334,672 | 1608 |
| ரூ. 350 | 320,759 | 1,400 | 322,701 | 1,351 | 327,168 | 1369 |
| ரூ. 250 | 238,593 | 701 | 243,225 | 723 | 249,022 | 742 |
| ரூ. 140 | 398,244 | 242 | 383,783 | 657 | 364,945 | 617 |
| மொத்தம் | 1,886,737 | 9,933 | 1,876,031 | 8,623 | 1,864,058 | 8,591 |
| மொத்தம் (குடும்பங்கள் பெறும் ரூ.125 அல்லது ரூ.140 நீங்கலாக) | 1,488,493 | 9,691 | 1,492,248 | 7,966 | 1,499,113 | 7,974 |
| உலர் உணவு பங்கீட்டு நிகழ்ச்சித் திட்டம் ரூ. 336-1260(இ) | 145,777 | 1,453 | 222,652 | 2,460 | 155,048 | 2,226 |
| ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டம் ரூ. 150 (2004 யூனிலிருந்து ரூ.200) | 83,171 | 80 | 90,866 | 117 | 103,967 | 127 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இரண்டாம் அரையாண்டில் வழங்கப்பட்ட சமுர்த்தி அட்டைகளை அடிப்படையாகக் கொண்டது.
(இ) ஆண்டு இறுதியில் உள்ளவாறு.

*மூலம்: சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்*

2004 ஆம் ஆண்டில் நிதித் துறையிடமிருந்தான வீடமைப்புக் கடன்களின் அளவு அதிகரித்திருந்தது. 2004 இல் வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களில் ரூ.15 பில்லியன் வரையான அதிகரிப்பு காணப்பட்டது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பன 2004 இல் மொத்தமாக 18,741 வீடமைப்புக் கடன்களை வழங்கியிருந்தன. இந்நிறுவனங்கள் வழங்கிய மொத்தக் கடன்களின் எண்ணிக்கை 2003 இல் 28,289 ஆகக் காணப்பட்டது.

சுனாமியால் பாதிப்படைந்த வீடுகளை கட்டுவது 2005 இல் மிகப்பெரும் சவாலாக அமையும். 2004 திசெம்பரில், சுனாமியால் 65,000 வீடுகள் முற்றாக சேதமடைந்திருப்பதாகவும் 44,000 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில், மாநகரசபை மற்றும் நகரசபை பிரதேசங்களில் வதியும் நகர சனத்தொகை 2001 இல் 14.6 சதவீதமாகக் காணப்பட்டது. அதன் பின்னர் பல்வேறு பிரதேச சபைகள் நகர்ப் பிரதேசங்களாக தரமுயர்த்தப்படுவதற்கு இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து நகர சனத்தொகை கணிசமாக அதிகரித்தது.

நாட்டில், நகர அபிவிருத்தி திட்டங்களை திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை முக்கிய பங்கை வகிக்கிறது. நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் நிபுணத்துவ ஆலோசனையை வழங்கும் பணியையும் நகர அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய செயற்பாடுகள், நிருவாக கட்டிடத் தொகுதிகள், வர்த்தக கட்டிடத் தொகுதிகள், நகர மேம்பாட்டு செயற்றிட்டங்கள், கைத்தொழில் செயற்றிட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள், சமூக மற்றும் கலாச்சார செயற்றிட்டங்கள் என்பவற்றின் கட்டுமானத்தினை உள்ளடக்குகின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட நகரமயமாக்க திட்டமிடல் அணுகுமுறையூடாக நகர அபிவிருத்தி திட்டங்களின் தயாரிப்பினை விரைவுபடுத்துவது 2004 இல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட முக்கிய பணியாகும். காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை நகரங்களது அபிவிருத்தி திட்டங்கள் இறுதியாக்கப்பட்டிருந்த போதிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளது மீளமைப்பு மற்றும் மீள்நிர்மாண நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய புதிய திட்டங்களை தயாரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை சுனாமியின் பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்க வேண்டியிருந்தது.


## பாதுகாப்பு வலைகள்

2004 இல் குடித்தொகையில் 41 சதவீதத்தினரை பிரதி நிதித்துவப்படுத்தும் மொத்தம் 1.9 மில்லியன் குடும்பங்கள் சமுர்த்தித் திட்டத்தின் வருமான ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நேரடியாக பயன் பெற்ற ிருந்தன. எனினும் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்கள தகவல்களின்படி ரூ.1,423 என்ற வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடித்தொகை 2002 இல் 19 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. சமூகநல நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்கிடலை மேம்படுத்தி இது உண்மையிலே தகுதியுடையோருக்கு நன்மைகளை அதிகரித்து அரசிறை சுமையை குறைப்பதற்கான அவசியத்தை இது எடுத்துக் காட்டுகின்றது.

2002 இல் நிறைவேற்றப்பட்ட நலன்புரி நன்மைகள் சட்டமானது வெளிப்படையான தன்மையுடன் நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கிடலை மேம்படுத்து வதற்கான சட்டரீதியான கட்டமைப்பை வழங்குகின்றது. இதன் நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நலன்புரி நன்மைகள் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு நலன் பெறுவோரை கூர்ந்த பரிசீலனையின் பின் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் நடைமுறைப் படுத்தலானது தேர்வு செய்முறையை மேம்படுத்து வதனை உறுதிப்படுத்தி, தகுதியான குடும்பங்களை அடையாளம் காணவும், வேறு நலதிட்டங்களுடன் இருக்கத்தக்க ஒத்திசைவின்மையை நீக்கவும் இறுதியாக வறிய குடும்பங்களுக்கு நலன்கள் அதிகரிக்கப்படவும் வழியேற்படும்.

2003 இல் ரூ.8,623 மில்லியனாக காணப்பட்ட சமுர்த்தி திட்டத்தின் மொத்த செலவினம் 2004 இல் சிறிதளவு குறைந்து ரூ.8,591 மில்லியன் ஆகக் காணப்பட்டது. தமது பிற சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் அவர்களை தொடர்ந்து ஈடுபடுத்தவும் கட்டாய சேமிப்பு நிதியத்திற்கான பங்களிப்பு மற்றும் சமூக பாதுகாப்பு கட்டணம் என்பவற்றை செலுத்து வதற்காக மாதமொன்றுக்கு ரூ.140 இனைப் பெறும் பெரும்பாலும் வருமான ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ஒதுங்கிய குடும்பங்களையும் இது உள்ளடக்குகிறது.

வரைபடம் 3.6
**சமுர்த்தி நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்**




## சுற்றுச்சூழல்

எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திலும் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கை களிலிருந்து தோன்றும் எதிர்மறையான புற விளைவுகளினால் இயற்கைச் சூழல் மீது பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடும். சூழல் ஒழுங்கு விதிகளுக்கான பொருளாதார சாதனங்கள், காத்திரமான அமுலாக்கம் பொது மக்களிடையேயான விழிப்புணர்வு என்பன சூழலை பாதுகாப்பதில் பிரதான பங்கை வகிக்கின்றன. விரைந்த பொருளாதார அபிவிருத்திக்கும் இயற்கை வளங்களது நிலைத்திருத்தலுக்கும் இடையிலான சமநிலையைப் பேணும் உயர்நிலை அமைப்பான சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சு சூழல் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மத்திய மலைநாட்டின் நீர்வீழ்ச்சிகளை பாதுகாக்கும் நோக்கில் தேசிய வலயக் கொள்கை மற்றும் தேசிய நீர்வீழ்ச்சி முகாமை கொள்கை என்பவற்றை சுற்றுச்சூழல் இயற்கை வள அமைச்சு தயாரித்து 2004 இல் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் இயற்கை வள அமைச்சானது, நிலைத்திருக்கும் உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான வழி காட்டுதல்களை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு தேசிய தூய்மையான உற்பத்தி கொள்கையையும் தந்திரோபாயங்களையும் உருவாக்கியுள்ளது. இக்கொள்கை மூலப்பொருட்களது காத்திரமான பாவனை, சூழல் தாக்கமற்ற நடைமுறைகளது பயன்பாடு மற்றும் உற்பத்தி செய்முறையில் விரயத்தை குறைப் பதனூடான நீர் மற்றும் வலு வளங்களது பயனுறுதிமிக்க பாவனை என்பவற்றை முதன்மைப் படுத்துகின்றது. சுற்றுச்சூழல் இயற்கை வள அமைச்சானது ஐ.நா.அபிவிருத்தி முகவரகத்தின் நிதிஉதவியுடன் இலங்கையின் பாரம்பரிய அறிவு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் உபாயத்தினையும் தயாரித்துள்ளது. நிலத்தில் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளிலிருந்து கடல் சூழலை பாதுகாப்பதற்காக சுற்றுச்சூழல் இயற்கை வள அமைச்சானது, கடலோர பாதுகாப்புத் திணைக்களம் நீரியல் மூலவளங்கள் மற்றும் மீன்பிடி அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மற்றும் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் அனுசரணையுடன் கடல் சூழலை பாதுகாப்பதற்காக

தேசிய செயற்றிட்டமொன்றினையும் தயாரித்துள்ளது. வான்வெளி மூலவளங்கள் முகாமை நிலையமானது இவ்வாண்டில் காற்று அசுத்தமடைதல் தொடர்பாக பொதுமக்களது விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தியதுடன் தூய்மையான காற்று செயற்றிட்டம் - 2007 ஐயும் இறுதிப்படுத்தியது.

சுற்றுச்சூழல் இயற்கை வள அமைச்சானது, சுற்றுச்சூழல் உடன்படிக்கைகள் தொடர்பு நிலையத்தை 2004 இல் நிறுவியது. பன்னாட்டுச் சுற்றுச்சூழல் உடன்படிக்கைகளை கண்காணித்து, ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதே இந்நிலையத்தின் பணியாகும். 'பாலைவனமாக்கலை வரட்சியையும் தடுக்கும் உடன்படிக்கை' ஆபத்தான விரயங்களை நாடுகளிடையே கொண்டு செல்வதனை கட்டுப்படுத்துவதற்கான பாசல் உடன்படிக்கை ஒப்பந்தம், "உயிரணு அசுத்தமாக்கிகளை கட்டுப்படுத்துவதற்கான ஸ்ரொக்ஹாம் ஒப்பந்தம்" என்பன இவ்ஒப்பந்தங்களுள் அடங்கும்.

1992 இல் பிரேஸிலில் நடைபெற்ற றியோ உச்சி மாநாட்டில் இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "நிகழ்ச்சி நிரல் 21" இற்கு இசைவாக சுற்றுச்சூழலை பாதுகாக்க உள்நாட்டு நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது அவசியமாகும்.

சுற்றுச்சூழல் துறையினை ஒழுங்குபடுத்தும் நிறுவனமான மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2004 இல் 31 சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகளை மேற்கொண்டது. மேலும், 16 சிறிய நீர் மின்வலு உருவாக்க செயற்றிட்டங்களும் 15 கிராமிய நீர் மின்வலு உருவாக்க செயற்றிட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டன. மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 215 திட்டங்களுக்கு இவ்வாண்டில் சுற்றுச்சூழல் அனுமதியை வழங்கியது. கைத்தொழில்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தை வழங்குவது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதான பணியாகும். 2004 இல் 221 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு 177 உரிமங்கள் வழங்கப்பட்டன. மேலும் அனுமதி மற்றும் கண்காணிப்பு விடயங்களை விரைவுபடுத்தும் நோக்கில் 45 நடவடிக்கைகளில் அதிகார சபையானது தனது அதிகாரத்தை உள்ளூர் ஆட்சி சபைகளுக்கு கையளித்துள்ளது.

2004 சனவரியிலிருந்து காற்றின் தரத்தை, குறிப்பாக, கொழும்பு நகரத்தில் மேம்படுத்தும் நோக்கில் பெற்றோலிய விநியோகத்தர்கள் குறைந்த சல்பர் கொண்ட டீசலை விநியோகிக்க ஆரம்பித்தனர்.

நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை சுற்றுச் சூழலுக்கு இசைவான வகையில் திண்ம கழிவுநீரை அகற்றுதல் ஒரு முக்கியமான விடயமாகும். கழிவு என்பது இயற்கையின் நோக்கில் ஒரு கழிவு அல்ல. மாறாக ஒரு வளமென்பதால் உள்ளூராட்சி மன்றங்கள் கழிவை வலுவாக மாற்றுவதற்கும் மீளப் பயன்படுத்தும் வகையிலும் மாற்றிக் கொள்வதற்கு தேவையான ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டியது அவசியமாகும். சனத்தொகை அடர்த்தி நகர் மையங்களில் அதிகரித்து வருவது மற்றும் விரிவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக திண்மக் கழிவுகள் அதிகளவில் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகவுள்ளது. பொருத்தமான கழிவகற்றும் முறைகளின்றி பாதையோரங்களில் திண்மக் கழிவுகளை குவிப்பதனை முற்றாக தடுக்கமுடியாது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை திண்ம கழிவு முகாமைத்துவத்தில் நேரடியான பொறுப்பெதனையும் கொண்டிருக்கவில்லை என்ற போதிலும் உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களுக்கான அவற்றின் கடப்பாடுகளுக்கு இணங்கி நடக்க தூண்டும் விதத்தில் பணிப்புரை வழங்கப்படுவதனூடாக தலைமைப் பங்கினை வகித்து வருகிறது. வருடாந்த மானியத்துடன் இதனை இணைப்பதனூடாக அவற்றை ஊக்கப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக வகுக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் மீள்செய்முறைப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசிடமிருந்து அதிகரித்த வெகுமதியைப் பெறுவர்.